# தீபாவளியன்று பாரதூரமான சம்பவம் எதுவும் யாழ்ப்பாணத்தில் இல்லை

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

மலர் 11

தபால் பெட்டி எண் 49

போன்: 389

இதழ்: 272

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 26 ஷஃபான் 30 செவ்வாய்க்கிழமை [11-11-69]

பாவனைக்குச் சிறந்தது

டொலர் மார்க்

அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்

கொழும்பு

யாழ்ப்பாணம், செவ்

தீபாவளித்தினத்தன்று ஒரு சிறு சம்பவத்தைத் தவிர வேறு பாரதூரமான சம்பவம் எதுவும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவில்லையென பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன

ஈழநாடு' தீபாவளி விழா இதற்கொரு காரணமாக இருக்கலாமென்றும் அதிகமானோர் விழாவிற்குச் சென்றிருந்தபடியால் பாரதூரமான சம்பவம் எதுவும் ஏற்படாமல் போயிருக்கலாம் என்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த வருடமும் அதற்கு முந்திய வருடங்களிலும் தீபாவளி தினத்தில் யாழ்ப்பாணப் பகுதியில் பாரதூரமான சம்பவங்கள் இடம்பெற்றனவென்றும் இம்முறை எதுவும் நடக்கவில்லையென்றும் அவர் தெரிவித்தார்:

கஸ்தூரியார் வீதியில் தீபாவளி தினம் நண்பகல் 1 மணியளவில் நடந்தசம்பவத்தில் ராசதுரை செல்வராசா என்பவர் தோளில் வெட்டுக்காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளாரென்றும் இது தவிர பாரதூரமான சம்பவம் எதுவும் நடக்கவில்லையெனவும் பொலிசார்தெரிவித்னர்

# 'அடுத்த விழா எப்போது?'

## அனைவரும் கேட்கும் கேள்வியிது

### யாழ் முற்றவெளி மனறந்தது!

'அடுத்த விழா எப்பொழுது?' வழியில் காணும் அத்தனை பேரும் இப்போது இதையே கேட்கிறார்கள்.

'ஈழநாடு' தீபாவளிவிழா இவ்வளவு சிறப்பாக நடைபெறும் என்று யாருமே எதிர்பார்க்கவில்லையென்ற உண்மையைச் சொல்லித்தானாக வேண்டும்.

குறைவான நாட்களில் நிறைவாள ஒரு வேலை செய்து விடுவது சற்றுகஷ்டமான காரியமே. இருந்தும் கஷ்டத்தின் களைப்பு நிறைவால் இடம் தெரியாமல் போய்விடுகிறது

தீபாவளித் திருநாளன்று நண்பகலுக்குப் பிறகு யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானம் முற்றவெளியாகக் காட்சிதரவில்லை. இடைவெளியில்லாத மக்கள் கூட்டமாகவே காட்சியளித்தது புடைவைக்கடைகள் அன்று மூடப்பட்டிருந்தன. ஆனால் அவற்றுள் இருந்தவையெல்லாம் அழகு ஆடைகளாக அழகுமங்கைகளிடமும் ஆடவர்களிடமும் கொஞ்சும் மதலைக் குழந்தைகளிடமும் ஒட்டி உறவாடிக் கொண்டு முற்றவெளியில் பலவர்ண ஓவியக் கலைக்கண்காட்சியை நடத்திக் கொண்டிருந்தன

சாதாரண நாட்களில் இவ்வித விழாவை நடத்துவதற்கும் தீபாவளி போன்ற புத்தாடை அணியும் திருநாட்களில் இவ்வித விழாக்களை நடத்துவதற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கின்றது என்பது அப்போதுதான் தெரிந்தது.

காளை மாடுகள் காத்திருந்த தமது வேளைவந்துவிட்டன என்று கனகுஷியாகக் காணப்பட்டன. பிற்பகல் மணி இரண்டிலிருந்து இரண்டு இரண்டாகக் கட்டப்பட்டிருந்த காளைகள் தமது சவாரி வண்டிகளை இழுத்துக் கொண்டு வெற்

கொள்ள வேண்டுமென்ற விருப்போடு கலந்து கொண்ட மாட்டுவண்டிச் சொந்தககாரர்களுக்கெல்லாம் மககள் தமது பாராட்டுதல்களை குதூகல உற்சாகத்துடன் வெளிப்படுத்திககொண்டிருந்தார்கள்.

அப்பா என்னையும் தூக்கிக் காட்டுங்கோ என்று கெஞ்சிக கேட்டுககொண்டிருந்த குழந்தைகளின் குரல்களையும் மறந்து பெற்றோர் சவாரியில் மனதைப் பறிகொடுத்துக கொண்டிருந்தது பார்க்கக்கூடியதாக இருந்தது

சவாரிமுடிவதற்கு முன்னரே திறந்த வெளியரங்கில் பலர் இடம் தேடிககொண்டார்கள் சவாரியைப்பார்த்துககொண்டிருககும் கூட்டம் வந்தால் அப்பப்பா பின் கலை நிகழ்ச்சிகளைப் பார்க்க முடியாமல் போய்விடுமோ என்ற சந்தேகத்தினலேயே இவ்வித முன்னேற்பாட்டில் இறங்கினர்கள்

இளம் தென்றலாக சாவகச்சேரி பஞ்சாபசோன் குழுவினர் கைதடி பழனிமலை குழுவினர் ஆகியோரது மங்கள இசை மேடையிலிருந்து மிதந்துவந்தது ஒருதிருமண வைபவத்தில் பங்குபற்றும் மனோகரமான ஒரு சூழ்நிலை அப்போது ஏற்பட்டது தமது பழம் நினைவுகளை நெஞ்சில் மீட்டு தம் குழந்தைகளுக்குத் தெரியாமலேயே சிலர் புன்சிரிப்பு சிரித்த காட்சி இன்னமும்நெஞ்சில் சிரிக்கிறது

யாழ் நகரின் பல பகுதிகளுக்கும் புதிதாக வெளிச்சங்களைப் போட முயற்சித்து வரும் மேயர் திரு எஸ் நாக

(4-ம் பக்கம் பாாக்க)

### ஈழநாடு விழா

# மாட்டுவண்டிசவாரி போட்டி முடிவுகள்

ஈழநாடு தீபாவளி விழாவையொட்டி யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடந்த மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி முடிவுகள் வருமாறு:

'ஏ' பிரிவு

1. சுருளி கந்தையா, திருநெல்வேலி.
2. எஸ். சோமசுந்தரம், பொன்னாலை
3. வி. சின்னத்துரை, மட்டுவில்
4. பி. கந்தசாமி, சரசாலை

'பி' பிரிவு

1. வி. சோமசுந்தரம் மட்டுவில் வடக்கு, மட்டுவில்
2. ஆர். சிவப்பிரகாசம், பண்டத்தரிப்பு
3. கே குழந்தை, மட்டுவில்
4. ரி. அப்புத்துரை, புளியங்கூடல் ஊர்காவற்றுறை

ஒற்றை மாட்டு வண்டில்

1. கே. சசிகுமார், உரும்பராய், கிழக்கு உரும்பராய்
2. வி. சுப்பிரமணியம், மானிப்பாய்
3. ரீ சுப்பிரமணியம் உரும்பராய் கிழக்கு உரும்பராய்

## இந்திரா - நிஜலிங்கப்பா மோதல்

# சமரசமுயற்சியில் மீண்டும் காங்கிரஸ் முதல்வர்கள்

# "சமயப் பூசலுக்கு பலியாகாதீர்"

### சிறுபான்மை இனத்துக்கு கோப்பாய் எம். பி. வேண்டுகோள்

சுன்னாகம், திங்கள்

"தமிழ்மக்களின் உரிமைக்காகப் போராடி இழந்த உரிமைகளை மீட்பதில் தமிழ் அரசுக்கட்சி தொடர்ந்து முழு மூச்சுடன் போராட முடிவுசெய்துள்ளது. திருமலையைச் சிங்கள மக்கள் வசம் இருந்து மீட்டுக்கொள்ளுவதில் எமது கட்சி பாடுபட்டுவரும். திருமலையில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டால்தான் இந்த நோக்கம் நிறைவேறும்''

உடுவில் தொகுதிக்கு அத்தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கம் ஆற்றிய சேவைகளைப் பாராட்டுமுகமாக குப்பிளான் கணேச வித்தியாசாலையில் நடை

கூறினர். கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை பேசுகையில் சில கட்சிக்காரர் தமிழ்பேசும் இனத்திடையே பிளவு ஏற்படுத்த சமயப் பூசலை ஏற்படுத்திவருவதாகவும் இஸ்லாம், இந்து, கிறீஸ்துவம் என இயங்கும் எமது சிறுபான்மை இனம் இப்பேர்ப்பட்ட துரதிர்ஷ்ட சம்பவங்களுக்குப் பலியாகாதிருக்க வேண்டுமென்றும் சொன்னர்.

உடுவில் எம். பி. தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டிற்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில் ஆட்சிமன்ற அங்கத்துவம் மிகவும் புனிதமானது என்றும், ஒரு பிரதிநிதியின் கடமைகள் விரல்விட்டு

# ராஜஸ்தான் மாளிகையில் இன்று முக்கிய மாநாடு

**காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சியில் மீண்டும் காங்கிரஸ் முதலமைச்சர்கள் இறங்கவிருக்கிறார்கள்.**

ஏற்கனவே காங்கிரஸ் முதல்வர்கள் மேற்கொண்ட முயற்சியொன்று தோல்வியுற்றது காங்கிரஸ் முதலமைச்சர்கள் சமரசமுயற்சியில் இறங்கியிருந்த வேளையில், திரு. நிஜலிங்கப்பா எடுத்த சிலநடவடிக்கைகள் அந்த முயற்சிகளைத் தோல்வியுறச் செய்தன.

அதன் பின்னர் மைசூர் முதன் மந்திரி புதுடில்லிக்

திரு வீரேந்திரபாட்டீல் பெங்களூர் திரும்பிய பின்னர் காங்கிரஸ் முதலமைச்சர்கள் மீண்டும் சமரச முயற்சியில் இறங்கவேண்டும் என்று வேண்டுகோள்விடுத்திருந்தார் அதன் பேரில் ராஜஸ்தான் முதலமைச்சர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக நாளை மாலை ஏழுமணிக்கு காங்கிரஸ் முதலமைச்சர்கள் ராஜஸ்தான் மாளிகையில் கூடுகிறார்கள்

காங்கிரஸ் தலைவர்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு கடைசி முயற்சி செய்துபார்க்க வேண்டும் என்று ராஜஸ்தான் முதல்வர் திரு வீரேந்திர பாட்டீல் கருத்து வெளியிட்டிருககிறார்

பருத்தித்துறை

# பஸ் நிலையப் பிரச்னை: நகரசபைத்தலைவர் அறிக்கை

உடுப்பிட்டி, திங்கள்

"பருத்தித்துறைப் பஸ் நிலையம் தற்போது இருக்

...சந்தையின் ஒரு பகுதியை உடைத்து பஸ் நிலையத்திற்குக கூடிய இடவசதி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டால்தான் இந்த நோக்கம் நிறைவேறும்''

உடுவில் தொகுதிக்கு அத்தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கம் ஆற்றிய சேவைகளைப் பாராட்டு முகமாக குப்பிளான் கணேச வித்தியாசாலையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் சொன்னார்.

வட்டுக்கோட்டை எம் பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில், தமிழ்இனத்தின் உரிமைகள் கடந்த பத்து ஆண்டுகளாக பாதுகாக்கத் தமிழரசுக்கட்சி பல் வேறுபோராட்டங்களைநடத்தியதாகவும்' ஒரு ஒப்பந்த அடிப்படையில் ஐக்கியதேசியக் கட்சியுடன் சேர்ந்து அரசாங்கத்தை அமைத்துத் தமிழ்மொழி உரிமையைச் சட்ட பூர்வமாக்கியதாயும் பலியாகாதிருக்க வேண்டுமென்றும் சொன்னார்.

உடுவில் எம். பி. தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டிற்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில் ஆட்சிமன்ற அங்கத்துவம் மிகவும் புனிதமானது என்றும், ஒரு பிரதிநிதியின் கடமைகள் விரல்விட்டு எண்ணிவிடக் கூடியதல்லவென்றும். இப்பகுதிக்கு மருத்துவ நிலையம், கல்லூரி ஒன்று அவசியம்தேவைபடுவதாயும், இதுகுறித்துக் கூடுமானவரை தாம் முயற்சிப்பதாகவும் தெரிவித்தார். திருவாளர்கள் மு ஆலாலசுந்தரம், திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம், எம். நடனசிகாமணி, திடீர்மரண விசாரணை அதிகாரி கே. பாலசுப்பிரமணியம் உட்படப் பலர்பேசினர். திரு. எஸ். செல்வநாயகம் வைபவத்திற்குத் தலைமைதாங்கினர்,

...மைச்சர்கள் சமரசமுயற்சியில் இறங்கியிருந்த வேளையில், திரு. நிஜலிங்கப்பா எடுத்த சிலநடவடிக்கைகள் அந்த முயற்சிகளைத் தோல்வியுறச் செய்தன.

அதன் பின்னர் மைசூர் முதன் மந்திரி புதுடில்லிக்குப்போய் பல தலைவர்களையும் சந்தித்துப்பேசி திரு நிஜலிங்கப்பாவும் திருமதி இந்திராகாந்தியும் சந்தித்துப் பேசுவதற்கு வழிசெய்தார். ஆனல் அந்த முயற்சியும் தோல்வியுற்றது

# உடுப்பிட்டிக் கிராமசபை இருபிரிவாகும்?

உடுப்பிட்டி, திங்கள்

உடுப்பிட்டிக் கிராமசபை விரைவில் இரு கிராமசபைகளாகப் பிரிக்கப்படவிருப்பதாக அறியப்படுகிறது. இதனைத் தொடர்ந்து கிராமசபை வட்டாரத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

உடுப்பிட்டிக்கிராமசபையைஇரண்டாகப் பிரிப்பது சம்பந்தமாக உள்ளூராட்சி அமைச்சு உடுப்பிட்டிக் கிராமசபையின் அபிப்பிராயத்தைக் கோரியுள்ளது உடுப்பிட்டிக் கிராமசபையே வட்டாரப்பகுதியில் மிகக் கூடுதலான வட்டாரங்களைக் கொண்ட ஒரு ஸ்தலஸ்தாபன சபையாக விளங்கிவருகிறது குறிப்பிடத்தக்கது!

இக் கிராமசபையில் 24 உறுப்பினர்கள் அங்கம் வசிக்கின்றனர் கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் கிராமசபையை இரண்டாகப்பிரிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதிலும் இறுதியில் அங்கத்தவர்களின் எதிர்ப்புக்காரணமாக அம்முயற்சி கைவிடப்பட்டது.

இப்போதைய நிலையில் கிராமசபையை இரண்டாகப் பிரிப்பதில் உறுப்பினர்கள் போதிய ஆதரவுகாட்டுவதாகத் தெரிகின்றது,

# 'கிராமந்தோறும் புராணபடன புத்துயிர் பெறவேண்டும்''

மாவிட்டபுரம், திங்கள்

'முருகன் பெருமைகளைக் கூறும் கந்தபுராணம் போன்ற நூல்களை கிராமங்கள் தோறும் ஆலயங்களில் வாசித்துவந்தால் அன்று மக்கள் இறைபக்தி மூலம் உயர்வடைந்ததுடன் சைவ சமயமும் உயர்வுபெற்று வந்தது ஆனல் இன்று அந்தப்பக்கம் அற்றுப்போனதால் சமயநிலை தாழ்வடைந்தது மீண்டும் கிராமங்கள் தோறும் புராணபடனம் வாசிக்கப்படவேண்டும்' என மல்லாகம் இந்துக்கல்லூரி இந்து சமய விருத்திச் சங்க 9-ம் ஆண்டு பரிசளிப்பு விழா கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது பேசிய இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன அதிகாரி திரு. அருள் தியாகராஜா கூறினர்.

சங்கத்தலைவர் அ. சரவணமுத்து தலைமையில் விழா நடைபெற்றது.

முருகனது பெருமைகள் பண்டையநாள் முதல் தமிழ் நாட்டில் பரப்பப்பட்டுவருகிறது. தொல்காப்பியம் போன்ற பண்டைய நூல்கள் முருகன் பெருமையை எடுத்துக்காட்டுகின்றன முருகன் உலகைக் காப்பதால் தான் நாடு சுபீட்சமடையும் என புலவர்களும் அறிஞர்களும் கூறுகின்றனர் இதை மக்கள் உணர்ந்து முருகன் பெருமை பற்றித் தியானம் செய்யவேண்டும்.

காங்கேசன்துறை வட்டார கல்வியதிகாரி திரு. கே. சோமசுந்தரமும் உரையாற்றினர்.

மற்படி சங்கம் நடத்திய போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு திருமதி ஞா. சோமசுந்தரம் பரிசில்கள் வழங்கினர்.

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகிய இவ்விழாவில் மாணவ, மாணவிகளின் நிகழ்ச்சிகளும் அளவை வேல் கோஷ்டியினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் இடம்பெற்றன

# இவருக்கு தீபாவளி றிமாண்டில்

மட்டுவில் திங்கள்

தீபாவளிப் பண்டிகைக்கு வீட்டிற்கு வந்த வாலிபரை, சாவகச்சேரி பஸ் நிலையத்தில் வைத்து பொலீசார் கைது செய்துகாவலில்வைத்தனர்.

நேற்று தீபாவளிப் பண்டிகைக்காக ஒட்டுசுட்டானிலிருந்து சாவகச்சேரிக்கு வந்த வாலிபர் ஒருவரை, சாவகச்சேரிப் பொலீஸ் கான்ஸ்டபிள் திரு. சின்னத்துரை கைதுசெய்து காவலில் வைத்தார், குறிப்பிட்ட வாலிபரை சாவகச்சேரி மாஜிஸ்திரட் திரு கே. விக்னராஜா ஒரு வழக்கு சம்பந்தமாக ஒரு வருடத்திற்கு முன்பு 18 மாதம் நல்நடத்தைப் பிணையில் விடுதலை செய்திருந்ததாகவும், ஆனல் இவர் கோர்ட் தீர்ப்பின்படி பிரதி மாதமும் பொலிஸ் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திடவில்லை என்றும் இவருக்கு பிடிவிருந்து தயாராகி இருந்ததென்றும் கூறப்பட்டது. இவரைப் பிணையில் விடுதலை செய்ய மறுத்த பதில் நீதவான் திரு. இரத்தினசிங்கம் இம்மாதம் 11-ம்திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி கட்டளையிட்டார்.

# பஸ் நிலையப் பிரச்னை: நகரசபைத்தலைவர் அறிக்கை

உடுப்பிட்டி, திங்கள்

''பருத்தித்துறைப் பஸ் நிலையம் தற்போது இருக்கும் இடத்திலேயே தொடர்ந்திருக்கும் என்றும் இதனை தற்போது இருக்குமிடத்திலிருந்து பருத்தித்துறைக்கு அப்பால் கொண்டுபோவதற்குத் தாம் காரணமாக விருப்பதாகப் பொய்ப் பிரசாரம் செய்யப்படுவதாகவும் பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு து நடராசா பருத்தித்துறை பஸ நிலையப் பிரச்னை சம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்

அவ்வறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:

'6-6-69 ல் இருபது பிரமுகர்கள் கைச்சாத்திட்ட ஒரு மகஜரை அனுப்பி என்னைச் சந்தித்துப்பேசவேண்டும் என்று கோரியதைத் தொடர்ந்து 17-9-69-ம் திகதி காலை நகரசபைக்காரியாலயத்தில் நடைபெற்ற 8 பேர் அடங்கிய ஆலோசனைக்கூட்டத்தில் ஒரு உபகுழு அமைககப்பட்டு பஸ் நிலையத்தை எப்படி விஸ்தரிப்பது என்றும், பொதுச்சந்தையை எப்படித் திருத்தம் செய்வது என்றும் ஆலோசிககப்பட்டது இது சம்பந்தமாக 27-9 69-ல் நடந்த நகரசபை விசேட கூட்டத்தில் பருத்தித்துறை பொதுச்சந்தையின் ஒரு பகுதியை உடைத்து பஸ் நிலையத்திற்குக கூடிய இடவசதி அளிககவேண்டுமென்றும், அத்துடன் மாதிரிப்பொதுச்சந்தையைப் படிப்படியாக நிர்மாணிப்பதற்கு உபயான் யம் ரூபா 50,000 ஒதுககுவதெனவும் தீர்மானிககப்பட்டது.

இதற்கான அங்கீகாரம் பெறுவதற்கு உள்ளூராட்சி ஆணையாளருககு விண்ணப்பிககப்பட்டுள்ளதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு துரிதநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1-11-69-ல் எதுவித முன்னறிவித்தலுமின்றி இலங்கைப் போககுவரத்துச்சபையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் பொதுச்சந்தை வளவிற்குள் நிற்பதாகவும் என்னைச் சமுகம்தரும்படியும் அழைககப்பட்டேன் குறித்த அதிகாரி பஸ் நிலையம் விஸ்தரிப்பது சம்பந்தமாக ஆலோசித்தபொழுது நகரசபை எடுககும் நடவடிககைகளை விபரமாககூறினன். தற்காலிகமாக மேலதிக இடம் தேவையெனத் தெரிவித்தால் சபையின் அங்கீகாரம் பெற்றுத் தருவதாகக கூறினேன் ஆனல்இதுவரையில் மேலதிக இடம்கோரி எவ்வித விண்ணப்பமும் கிடைககவில்லை.

# வேலைகள் பூர்த்தியாகியும் திறப்புவிழா நடக்கவில்லை

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் தபாற் கந்தோரிலுள்ள தொலைபேசிபரிவர்த்தனைப்பகுதியில் நடந்த அபிவிருத்தி வேலைகள்யாவும் பூர்த்தியாகியும் சிலரது அசிரத்தையால் மக்களுக்கு இச்சேவை கிடைக்காமல் போய்விட்டதாக தொலை தொடர்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இம்மாதம் 24-ம் தேதி பரிவாத்தனைப்பகுதியை தபால் மா அதிபர் திரு, வேர்ணன் அபயசேகரா திறந்துவைப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததாகவும் சிலரது அசிரத்தை காரணமாக திறப்புவிழா பின்போடவேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இவ்வருடம் அக்டோபர் மாதம் பரிவர்த்தனை பகுதி வேலைகள் முடிவடைந்துவிடும் என்று கடந்த வருடம் அக்டோபர் மாதமே சம்பந்தப்பட்ட காரியாலயத்திற்கு அறிவிக்கப்பட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம்.

பரிவர்த்தனைப் பகுதியில் கடமையாற்றுபவர்களுக்கான நியமனம் வழங்கப்படாததோடு, அவர்களுக்கான 3 மாத பயிற்சியும் நடைபெறவில்லை யென்றும் தெரியவருகிறது.

— —

சென்னை. நவ. 8

'காங்கிரஸ் கட்சி பிளவுபடுவது நாட்டிக்கு நல்லதல்ல. நாட்டில் ஜனநாயகம் பிழைத்திருப்பதை காங்கிரஸ்பிளவு கேள்விக்குறியாக்கிவிடும்' என்று தமிழகமுதல்வர் திரு. மு கருணாநிதி நேற்றுக் கூறினர்:

...ருந்த தமது வேளைவந்துவிட்டன என்று கனகுஷியாகக் காணப்பட்டன. பிற்பகல் மணி இரண்டிலிருந்து இரண்டு இரண்டாகக் கட்டப்பட்டிருந்த காளைகள் தமது சவாரி வண்டிகளை இழுத்துக் கொண்டு வெற்றிப் பாதையில் ஓடத்தொடங்கியபோது முகிலில் மறைந்திருந்த மழைக்குக்கூட இறங்கிப் பார்ப்போமா என்ற ஆவல் ஒன்று அப்போது ஏற்பட்டது. ஆனல் அந்த ஆவல் மக்களின் ஆவலுடன் போட்டியிட முடியவில்லை.

வெற்றி தோல்வியினைப் பொருட்படுத்தாது இந்த விழாவில் கலந்து

# பிரதமர் பெயர் சூட்டுவார்

மானிப்பாய், திங்கள்

இம்மாதம் 14ந்திகதி வடபகுதிக்கு வரும் பிரதமர் அளவெட்டி பலநோக்கக் கூட்டுறவு சங்க கட்டிடம் இருக்கும் வீதிக்கு 'கூட்டுறவாளர் வீதி'என்றபெயரைச் சூட்டுவார்

இவ்வீதிக்கு கூட்டுறவாளர் வீதி என்ற பெயரைச் சூட்டவேண்டுமென மல்லாகம் கிராமசபை ஏகமனதாகத் தீர்மானித்திருந்தது தெரிந்ததே

— —

# சாவகச்சேரி எம்.பி.சுகவீனம்

மட்டுவில், திங்கள்

திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக, சாவகச்சேரி ஆடசிமன்ற உறுப்பினர் திரு. வ ந. நவரத்தினம் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிககப்பட்டுள்ளார்

நேற்று முன்திளம் இவருககு திடீரென பலத்த சுகவீனம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து திரு நவரத்தினம் எம் பி யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிககு கொண்டுவரப்பட்டார் மருத்துவ பரிசோதனையின் பின். திரு நவரத்தினத்திற்கு பூரண ஓய்வு அவசியம் என வைத்திய நிபுணர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து, இவர் ஆஸ்பத்திரியில் அனுமதிககப்பட்டுள்ளார் அவர் எக் காரணத்தைக கொண்டும், அதிகம் பேசவோ சிந்திககவோ கூடாதென்றும், பார்வையாளர்கள் எவரையும் அனுமதிக்கக கூடாதென்றும், டாகடர்கள் கண்டிப்பான உத்தரவு போட்டுள்ளனர்.

2. ஆர். சிவப்பிரகாசம், பண்டத்தரிப்பு
3. கே குழந்தை, மட்டுவில்
4. ரி. அப்புத்துரை, புரியங்கூடல் ஊர்காவற்றுறை

ஒற்றை மாட்டு வண்டில்

1. கே. சசிகுமார், உரும்பராய், கிழக்கு உரும்பராய்
2. வி. சுப்பிரமணியம், மானிப்பாய்
3. ரீ சுப்பிரமணியம் உரும்பராய் கிழக்கு உரும்பராய்

# வடபகுதியில் பிரதமரின் நிகழ்ச்சிகள்

## காங்கேசன்துறை விஜயத்தில அமைச்சர் சுகததாச வரவேற்பார்

யாழ்ப்பாணம், செவ்.

வடபகுதிக்கு இம்மாதம் 14-ம் திகதி விஜயம் செய்யும் பிரதமர் டட்லி சேனநாயக்கா அன்றுகாலை யாழ்ப்பாணம் கச்சேரியில் நடைபெறும் மாவட்ட விவசாய கமிட்டியின் விசேஷ கூட்டத்தில் கலந்துகொள்வார்

பிரத்மரின் வடபகுதி விஜயத்தின் முழுவிபரமும் வருமாறு:

14-ம் திகதி காலை 7-00 மணிக்கு இரத்மலானையிலிருந்து விமனத்தில் புறப்படல், 8 00 பலாலி விமான நிலையத்தை வந்தடைதல்: 8-15 பலாலி விமானநிலையத்திலிருந்து புறப்படல், 8-40 கிங்ஸ் கவுஸை வந்தடைதல், 9-10 கிங்ஸ் கவுஸிலிருந்து புறப்படல், 9-15 கச்சேரி மாவட்ட விவசாய கமிட்டிக்கூட்டத்தில் பங்குபற்றுதல். 12-30 நண்பகல் உணவு, பிற்பகல் 2-00 கிங்ஸ் கவுஸிலிருந்து புறப்படல் 2-10 விவசாய பரிசோதனை நிலையத்தை வந்தடைதல், 2-45 விவசாயப் பாடசாலையிலிருந்து புறப்படல், 2-50 இணுவில் தனியார் பாலர் பாடசாலை வந்தடைதல், 3-05 இணுவிலிலிருந்து புறப்படல், 3 45 அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை வந்தடைதல்

மாலை 4-30 அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து புறப்படல், 4-55 தொண்டமானறு ஏரித்திட்டத்திற்கு வந்தடைதல், 5-20 தொண்டமானற்றிலிருந்து புறப்படல் 5-55 கிங்ஸ் கவுஸை வந்தடைதல்.

இரவு 7-10 கிங்ஸ் கவுஸிலிருந்து புறப்படல், 7-15 வடபகுதி விவசாய விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்காரியாலயத்திற்கு வந்தடைதல் 8-00 வ வி. உ கூ சங்கத்தினரால் இராப்போசன விருந்தளிக்கப்படும்

15-ம் திகதி காலை 7-00 கிங்ஸ் கவுஸிலிருந்து புறப்படல், 8-45 திருவையாறு இளைஞர் திட்டத்தை வந்தடைதல், 9-10 திருவையாறிலிருந்து புறப்பட்டு வில்சன் ரோட், இரணைமடுக்குளம், அழகரத்தினம் ரோட் வழியாக விசேஷ திட்டப் பகுதிக்கு செல்லுதல், 9-36 திட்டக்காரியாலயத்தை வந்தடைதல் உத்தியோகத்தர்களுடனும், பயிர்ச்செய்கைக் குழுவினருடனும் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கப் பிரதிநிதிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தல்.

10-20 திட்டக்காரியாலயத்திலிருந்து புறப்படல். 10-40 பரந்தன்நெல்களஞ்சியத்தை வந்தடைதல். 11-15 பரந்தன் நெற களஞ்சியத்திலிருந்து புறப்படல், 11-10 நீர்ப்பாசன இலாகா பங்களாவை வந்தடைதல், பிற்பகல்2-00பங்களாவிலிருந்து புறப்படல், 2-30 விஸ்வமடுகுளம் இளைஞர் குடியேற்ற திட்டத்தை வந்தடைதல், 3-15 விஸ்வமடுகுளத்திலிருந்து புறப்படல், 3-45 பரந்தன் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தை வந்தடைதல், 4-15 பரந்தனிலிருந்து புறப்படல். 5-00 மிருசுவில்பெண்கள் குடியேறறத்திட்டத்திற்கு வந்தடைதல், 5-30 மிருசுவிலிலிருந்து புறப்படல் 6-00 கிங்ஸ் கவுஸை வந்தடைதல்

16-ம் திகதி காலை 8-00 கிங்ஸ் கவுஸிலிருந்து புறப்படல், 8-15 திடற்புலம் வீடமைப்புத் திட்டத்திற்கு வந்தடைந்து வீடமைப்பு திட்டத்தை ஆரம்பித்து வைத்தல், 8-50 திடற்புலத்திலிருந்து புறப்படல், 9-00 காங்கேசன்துறையை வந்தடைதல், 9-30 அலங்கார பந்தலில் தேசிய மயசேவை மந்திரி திரு வி ஏ சுகததாசாவினல் வரவேற்கப்படுதல். 9-45 காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திவேலைகளை ஆரம்பித்து வைத்தல், கெஸ்ட் கவுஸில் நண்பகல் உணவு மாலை 4-00 பலாலி விமான நிலையத்திலிருந்து கொழும்பிற்குபுறப்படல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

மனேச்சர்

புளியங்குளத்தில் உள்ள எமது விவசாயப்பண்ணைக்கு மனேச்சர் தேவை கிருஷிக பாடசாலைப்பயிற்சி பெற்றவர்கள் மட்டும் 15-11-69க்கு முன் கீழ்க் கண்ட விலாசத்துக்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். சகைமைக்குரியவேதனம் கொடுக்கப்படும். ஸ்ரீலங்கா ரப்பியோகா புறடக்ஸ், 9, மணல்தறைவீதி. யாழ்ப்பாணம். 1605

### விற்பனைக்கு

தோட்டம்

பளையிலிருந்து 6 மைல் தூரமும், இயக்கச்சி சந்தியிலிருந்து 1 மைல் தூரமும் சொண்ட முள்ளியான் P. W. D. வீதியில் முற்பக்க 176 பரப்பு இயக்கச்சி கிழக்குத் தோட்டம் விற்பனைக்குண்டு. அதில் 10 பரப்பு தென்னந்தோட்டம். ஒரு ஏக்கர் விலை ரூபா 450/- விபரங்ளுக்கு: 13/2 வேம்படி வீதி, யாழ்ப்பாணம் 1535

## புதிய உறுப்பினர்

சுன்னுகம், திங்கள்

தாவடி கிராமமுன்னேற்றச்சங்கம் அண்மையில் கூடி கீழ்க்காண்போரை நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத்தேர்ந்தெடுத்தது.

தலைவர்: மு. மதியாபரணம் உபதலைவர்: டாக்டர் கு. தம்பையா, செயலாளர்: சி. செல்வரத்தினம், உபசெயலாளர் இ. சரவணபவான், பொருளாளர்: கா. இராசரத்தினம்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6 30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப் பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 திரை கானம், 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-10 பேச்சு, 6-15 வீணை இசை, 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச் சுருக்கம், 7-03 கர்னடக இசை, 7-35 மெல்லிசை, 7-45 நாடகம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரையாடல், 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.


வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
ஞாயிறு, போயா 2-30 மணி
சிவாஜி - கே. ஆர். விஜயா
நடித்த
நெஞ்சிருக்கும் வரை

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
ஜெமினி - சரோஜாதேவி
முத்துராமன் - வாணிஸ்ரீ
நடித்த
குலவிளக்கு

ராஜா — யாழ்ப்பாணம்
தினசரி பிற்பகல் 2-30, மாலை 6-30, இரவு 9-45 மணி
போயா முன்தினம், போயா தினம், விடுமுறை தினம் காலை 10-30 மணி
* ஜெய்சங்கர் * விஜயகுமாரி
முத்துராமன், வாணிஸ்ரீ, நாகேஷ்
நடித்த
டீச்சரம்மா

வின்ஸர் (யாழ்ப்பாணம்)


உதைபந்தாட்டம்

# சென். பற்றிக்ஸ்-பொலிஸ்கோஷ்டி சுவையான ஆட்டம்

## தலா ஒரு கோல் போட்டனர்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் பொலிஸ் தெரிவுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி, வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இப்போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர், காலஞ்சென்ற முன்னுள் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் அதிபர் வண. சாள்ஸ் மத்தியூஸின் மரணம் குறித்து, மைதானத்தில் இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன் பின்னர் இரு கோஷ்டிவீரர்களையும், யாழ். சிறைச்சாலை அதிகாரி திரு. ஜான்ஸனுக்கு, சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண. மருதநாயகமும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு புஸ்சலாவையும் அறிமுகம் செய்துவைத்தனர்

போட்டி ஆரம்பமாகியதும், இரு கோஷ்டி வீரர்களும் மிகவேகமாக விளையாடினர் இடைவேளைக்கு முன் சென். பற்றிக்ஸ் கோஷ்டியினர் இரு கோல்களைப் போடும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டுவிட்டனர். பொலிஸ் கோஷ்டியின் வீரர்கள் ஒருவரிடம் ஒருவர் பந்தை தட்டிக்கொடுப்பதில் சிறந்து விளங்கியமையால். சென். பற்றிக்ஸ் வீரர்கள் சற்று சோர்வுற்று காணப்பட்டனர். இச்சந்தர்ப்பத்தில் பொலிஸ் கோஷ்டியின் மத்திய முன்னணி வீரர் அன்வர், மின்னல் வேகத்தில் ஒரு கோலைப் போட்டார். இதன் பின்னும் இவ்வீரர் பல 'அதிர் அடிகளை' அடித்தபோதும். சென். பற்றிக்ஸ் கோல்காப்பு வீரரிடம் அவை பலிக்கவில்லை இடைவேளையின் போது பொலிஸ் கோஷ்டி 1 0 கோலைப் பெற்றிருந்தது.

இடைவேளையின் பின் சென். பற்றிக்ஸ் கோஷ்டியின் முன்னணி வீரர்கள் பலமுறை கோல்கள் போட முனைந்தபோது அவையாவும் பொலிஸ் கோஷ்டியின் பின்னணி வீரர்களாலும், கோல்காப்பு வீரராலும் மிகசாதுரியமாக முறியடிக்கப்பட்டன. ஆனுலும் ஆட்டம் முடிவடைவதற்கு இரண்டு நிமிடங்கள் இருக்கும்போது சென். பற்றிக்ஸ் கோஷ்டியின் வலதுகரை முன்னணி வீரர் அன்ரன் திடீரென ஒரு கோலைப்போட்டார். இதனுல் ஆட்டம் சரிசமனுக (1—1) முடைவடைந்தது.

பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் மத்தியில், யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ஈ. கே. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர். (தே நி.)

## திவுப்பகுதியில் விளையாட்டு

ஊர்காவற்றுறை, திங்கள்

தாச்சி விளையாட்டுப் போட்டி ஒன்றை தீவுப்பகுதிக்காரியாதிகாரிபிரிவு விளையாட்டுக்கழகம் தீவுப்பகுதியில் நடாத்தத் திட்டமிட்டுள்ளது.

புளியங்கூடல் சனசமூக நிலையம், வேலணை தேவி கோட்டம் சனசமூகநிலையம், புங்குடுதீவு பாரதி சனசமூக நிலையம், சரவணை திருவள்ளுவர் சனசமூகநிலையம், ஊர்காவற்றுறை றேஞ் செஸ் விளையாட்டுக்கழகம் என்பன இப்போட்டியில் கலந்துகொள்ளுகின்றன.

## தீவுப்பகுதி உதைபந்தாட்டம்

ஊர்காவற்றுறை, திங்கள்

தீவுப்பகுதிக்காரியாதிகாரி பிரிவு விளையாட்டுக்கழகத்தின் ஆதரவில் இம்மாதம் 7-ந்திகதிதொடக்கம் உதைபந்தாட்டப்போட்டி ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை விளையாட்டுக்கழகக் காரியதரிசி திரு. பரஞ்சோதி மேற்கொண்டுள்ளார்.

புங்குடுதீவு சிவலைப்பிட்டி சனசமூகநிலையம், சென். சேவியர்விளையாட்டுக்கழகம் காரைநகர் நீலிப்பந்தனை சனசமூகநிலையம், ஊர்காவற்றுறை றேஞ் செஸ் விளையாட்டுக்கழகம் வேலணை

## பாலத் திறப்புவிழா

பச்சிலைப்பள்ளி, திங்கள்

தாளையடி - மருதங்கேணி கடற்கரை வீதியில் உள்ளுராட்சி அமைச்சினுல் வழங்கப்பட்ட நவீன வார்ப்புப் பாலம் இம்மாதம் 17-ம் திகதி மாலை நாலு மணிக்கு திறக்கப்படவிருக்கிறது. இதற்கான ஆயத்த வேலைகளை செம்பியன்பற்றுகிராம சபை செய்துவருகிறது.

## விக்டோரியாக்கழகம் சாம்பியனுகியது

பூநகரி, திங்கள்

பூநகரி காரியாதிகாரி பிரிவினரால் நடத்தப்பட்ட தாச்சிச்சுற்றுப் போட்டியில் விக்டோரியாக்கழகம் சாம்பியனுகியது.

இப்போட்டி பூநகரி காரியாதிகாரி திரு எம் இராசரத்னம் தலைமையில் பூநகரி கோட்டை மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் பூநகரி விக்டோரியா விளையாட்டுக்கழகமும் வேரவில் கிராமமுன்னேற்றச்சங்கத்தினரும் மோதினர்.

500க்கு மேற்பட்ட ரசிகர்கள் மத்தியில் நடந்த இப்போட்டியில் பூநகரி விக்டோரியா விளையாட்டுக்கழகம் 19 பழங்களால் வெற்றியீட்டி சாம்பியனுகியது. மேற்படி விளையாட்டுக்கழகம் கிளிநொச்சி, பளை காரியாதிகாரி பிரிவில் நடந்த போட்டியிலும்வெற்றியீட்டியுள்ளதுஎன்பது குறிப்பிடத்தக்கது.

# டிறிபேர்க் இந்துவை வென்றது

மட்டுவில், திங்கள்

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரிக்கும், சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் டிறிபேர்க்கல்லூரி 3-1 கோல்களால் இந்துக்கல்லூரியைத் தோற்கடித்தது

சாவகச்சேரி மகிளங்கேணி மைதானத்தில் நடைபெற்ற இந்த உதைபந்தாட்டப் போட்டிக்கு திரு. கே. சிறிதரன் மத்தியஸ்தராகப் பணிபுரிந்தார்,

போட்டி ஆரம்பமானதும் இரு கல்லூரிகளின் கோஷ்டியினருக்குமிடையில் ஆட்டம் விறுவிறுப்பாக இருந்தது. இடைவேளைக்கு முன்னர் டிறிபேர்க்கல்லூரி ஒரு கோலைப்போட்டது. இடைவேளையின் பின்னர் ஆட்டம் ஆரம்பித்ததும் இரு கோஷ்டிகளுக்கு மிடையில் ஆட்டம் பரபரப்பாக இருந்தபோதிலும், மின்னல் வேகத்தில் டிறிபேர்க் கல்லூரி மீண்டும் இரண்டு கோல்களைப் போட்டது. இறுதிக் கட்டத்தில் இந்துக்லூரி ஒரு கோலைப் போட்டது

இந்த ஆட்டத்தில் டிறிபேர்க் கல்லூரி வீரர்களான எஸ். ஜெயரத்தினம், ஆர். குலராஜன், எஸ். பாலசிங்கம் ஆகியோர் இந்த மூன்று கோல்களின்போது கையாண்ட சாமர்த்தியமான ஆட்டம் ரசிக்கும்படியாக இருந்தது. இந்துக்கல்லூரி வீரர் பஞ்சலிங்கத்தின் விளையாட்டும் சிறப்பாக இருந்தது.

திரைப்பட விமரிசனம்

# எதிர்நீச்சல்

திரைவண்டு

''அடுத்தாத்து அம்புஜத்தைப் பார்த்தேளா?'' அம்புஜத்தைப் பார்க்காட்டாலும்பரவாயில்லை இந்தாத்து பட்டு மாமியையும் மாடிப்படி மாதுவையும் கண்டிப்பாப் பாத்துடுங்கோ!

யாழ்ப்பாணம் வின்சர் தியேட்டரில் இப்பொழுது காட்சியளித்துக்கொண்டிருக்கும் 'எதிர் நீச்சல்' படத்தை பாருங்கள் உங்களுக்கு விஷயம் விளங்கும்.

பலதரப்பட்ட மனப்போக்குடைய பாத்திரங்களை ஒரு மாடி வீட்டுக்குள் படைத்து எதிர் நீச்சல்' படத்தை வெற்றிகரமாக உருவாக்கியிருக்கிருர் பாலசந்தர் கதை வசனம். டைரக்ஷன் மூன்றும் அவர் பொறுப்பு. பாத்திரங்களுக்கேற்ப வசனம் அமைந்துள்ளது. தர்க்க வாதங்கள் சிலஇடங்களில் சிந்தனையைத் தூண்டுகின்றன.

ஒரேயொரு மாடி வீடு. அந்த வீட்டுக்குள் அடுத்தாத்து அம்புஜம், இந்தாத்துப்பட்டுமாமி மட்டுமல்ல இன்னும் பல குடும்பங்கள் அங்கு வாழ்கின்றன. அந்த வீட்டின் மாடிப்படியின்கீழ் மாது என்ற அநாதையும் வாழ்கின்ருன். அவன் இல்லாமல் அந்த வீட்டிலுள்ள குடும்பங்கள் வாழமுடியாது அத்தனைபேருக்கும் அவன் அலுக்காமல் சலிக்காமல் பணிவிடைசெய்கிருன் அவர்கள் கொடுக்கும் உணவில் அவன் உயிர் வாழ்கிருன். இரவில் லோண்டரியில்துணி சுமந்து அதில்வரும் வருமானத்தில் கல்லூரியில் படிக்கிருன் முதல்தரத்தில் சித்தியடைகிருன்.

மாதுவாக நாகேஷ் நடிக்கிருர். சிரிக்கவைக்கமட்டுமல்ல கண்ணீர்விடவைக்கவும் தன்னுல் முடியுமென்பதை நாகேஷ் தமது குணசித்திர நடிப்பினுல் உணர்த்துகிருர். பட்டுமாமியாக வரும் சௌகார்ஜானகி சினிமாப்பைத்தியம்எதற்கெடுத்தாலும் சினிமாதான் உதாரணம். நாகேஷைக் காதலிக்கும் ஜெயந்தி நன்ருக நடிக்கிருர். அவருக்கு நல்லஎதிர்காலம்இருக்கிறது. எம். ஆர். ராதாவின் மகன் எம். ஆர். ஆர் வாசு அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கிறதுஎன்று சொல்லும்வகையில் தோன்றுகிருர். சுந்தரராஜன் தமது உணர்ச்சி கரமான நடிப்பினுல் உள்ளத்தை நெகிழவைக்கிருர். முத்துராமன் மற்றும் நடிகநடிகையர்களும் தங்கள் பாத்திரங்களை உணர்ந்து சிறப்பாக நடித்திருக்கின்றனர்.

வாலியின் பாடல்கள் நன்று.


பலதரப்பட்ட குணம்சங்களைக் கொண்ட பாத்திரங்களை ஒருமாடி வீட்டில் உருவாக்கி சிந்திக்கவும் சிரிக்கவும் கண்ணீர் சிந்தவும் வைத்திருக்கிருர் திரு பாலசந்தர்.

நல்ல படம் எல்லோரும் பார்க்கக் கூடியபடம். எதிர் நீச்சல்.

## தானுகவே சிக்கியது

சுழிபுரம், திங்கள்

பொன்னுலை - வட்டுக் கோட்டை ரேட்டில் கடத்தல் பொருள்களென கருதப்படும் பொருட்களுடன் சென்ற லொறியொன்று சங்கானைப் பொலிசாரிடம் தானுகவே சிக்கிக் கொண்டது. பின்னுல் வந்துகொண்டிருந்த ஒரு ஜீப்வண்டியைக் கண்ட லொறிச் சாரதி ஒரு ஒழுங்கை வழியாக லொறியை ஓட்டிச் செல்வதற்கு முயன்றபோதுலொறி சேற்றில் புதைந்ததால் லொறியில் இருந்த சாரதி உட்பட சகலரும்லொறியை விட்டுவிட்டு ஓடிமறைந்தனர். லொறியையும்பொருள்களையும் சங்கானைப் பொலிசார் பொறுப்பு ஏற்றனர். பொலிசார் லொறிச் சாரதியையும் சொந்தக்காரரை தேடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டீச்சரம்மா

# வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

பட்டுமாமியின் யாழ்ப்பாண விஜயம்!

தென்னகத்திரைகளில்
100 நாட்களுக்குமேல் ஓடிய
வெற்றிச்சித்திரம்
கலாகேந்திராவின்

# எதிர்நீச்சல

கதை, வசனம் டைரக்ஷன்
கே. பாலசந்தர்

## யாழ். வெலிங்டன்

மற்றும்
6 சினிமாஸ் திரைகளில்
இப்பொழுது திரையிடப்படுகிறது



பத்மஸ்ரீ
★ சிவாஜி கணேசன்

நாட்டியப் பேரொளி
★ பத்மினி

காதல் ராணி
★ கே. ஆர். விஜயா

ஹாஸ்ய மன்னன்
★ நாகேஷ்

★ மனோரமா ★ முத்துலக்ஷ்மி ★ வி. கே. ராமசாமி
மற்றும் பலர் திறம்பட நடித்த
கமலா பிக்சர்ஸ் அளிக்கும்

# பாலாடை

டைரக்ஷன் ஏ. பீம்சிங் பாடல் கண்ணதாசன் இசையமைப்பு கே. வி. மகாதேவன்


பரஞ்சோதி மேற்கொண்டுள்ளார்.

புங்குடுதீவு சிவலைப்பிட்டி சனசமூகநிலையம், சென். சேவியர்விளையாட்டுக்கழகம் காரைநகர் நீலிப்பந்தனை சனசமூகநிலையம், ஊர்காவற்றுறை றேஞ் செஸ் விளையாட்டுக்கழகம், வேலணை ஐயனார் சனசமூக நிலையம், ஐக்கிய விளையாட்டுக்கழகம், சரவணை சனசமூக நிலையம் என்பன போட்டியில் கலந்து கொள்ளுகின்றன.

## வெற்றி தோல்வி இல்லை

பருத்தித்துறை, திங்கள் நெல்லியடி மகாவித்தியாலய மூன்றும் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் திக்கம் உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் இருதரப்பும் ஒரு கோலும் போடாது வெற்றி தோல்வியின்றி ஆட்டத்தை முடித்துக்கொண்டன. திரு கே சிதம்பரநாதன் மத்தியஸ்தம் வகித்தார்.


### ஸ்ரீ காலிங்கா
இணுவில்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி-கே. ஆர். விஜயா-பத்மினி
நடித்த
**இருமலர்கள்**

வல்வெட்டித்துறை
### றஞ்சனா தியேட்டர்
தினசரி 2-30 6-30, 9-30.
சுந்தரராஜன். - பத்மினி
பேபிராணி
நடித்த
**குழந்தைக்காக**

### MANOHARA
JAFFNA
தினசரி 2-30, 6-30, 10-00
மனோஜ்குமார், பிரான், ஆஷாபரேக்
நடித்த
**தோபதன்**
(ஹிந்தி-ஈஸ்ட்மன் கலர்)

Manojkumar, Asha Parekh
in
DO BADAN
(Hindi-Color)

### REGAL JAFFNA
Daily 4 45, 7 & 9-45 p m.
Fredrick Stafford
Peter Van Eyck
in
THE MILLION DOLLAR MAN
(Adults)




ஓர் 14 அவு. யானை மார்க் ஒரேஞ் பார்லி போத்தல் உங்களுக்கு, நுரை பொங்கும் துல்லியமான 3 'கிளாஸ்', அதி தெம்பூட்டும் சுவை மிகுந்த, இன்றைய குளிர்பானச் சந்தையிலே எவராலும் பெறுதற்கரிய, அதி தூய்மையான உன்னத தர பானத்தை, இனிமையாக அளிக்கிறது. தாகத் தணிவுக்கு, அன்று முதல்—இன்று வரை—இல்லங்கள் அனைத்திலும் இப்பானம் அருந்தப் படுதற்குக் காரணம், இதுவே.

எலிபன்ட் ஹவுஸாரின்
ஓர் உயர்தர உற்பத்தி

# உங்களுக்கு சரியான சேவை

GRANT631259


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காங்கிரஸ் கட்சியிலிருந்து

# இந்திராவை விலக்கிவிட நிஜலிங்கப்பா ஆலோசனை

## சமரச முயற்சியில் மீண்டும் மைசூர் முதல்வர்

புதுடில்லி, நவ. 10

திருமதி இந்திராகாந்தியைக் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலக்கிவிடுவது சம்பந்தமாக காங்கிரஸ் கட்சித் தலைவர் ஆலோசனை நடத்திவருவதாகக் கூறப்படுகின்றது.

இம்மாதம் 22-ம் திகதியும் 23-ம் திகதியும் புதுடில்லியில் நடைபெறவிருக்கும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் சட்டவிரோதமானது என்று திரு. நிஜலிங்கப்பாஅறிவித்திருக்கிறார்

பிரதமர் இந்திராகாந்திக்கும் - திரு. நிஜலிங்கப்பாவுக்குமிடையில் கருத்து வேற்றுமைகள் தொடர்ந்து வளர்ந்துகொண்டிருக்கும் அதேசமயம் கட்சியில் பிளவு ஏற்படாமல் தடுப்பதற்கும், தலைவர்களுக்கிடையில் சமரசம் செய்துவைப்பதற்கும் மைசூர் முதலமைச்சர் மீண்டும் ஒரு முயற்சியை மேற்கொண்டுள்ளார்.

மைசூர் முதலமைச்சர் திரு. வீரேந்திராபட்டேல் காங்கிரஸ் தலைவர்களுக்கிடையில் சமரசம் ஏற்படுத்திவைப்பதற்காக எற்கனவே எடுத்த ஒரு முயற்சி தோல்வியில் முடிந்தது.

திரு. வீரேந்திராபட்டேல் இப்பொழுது புதுடில்லியிலிருந்து பெங்களூர் திரும்பிவிட்டார், காங்கிரஸ் முதலமைச்சர்கள் இப்பொழுது ஏற்பட்டுள்ள காங்கிரஸ் நெருக்கடிகளைத் தீர்த்துவைப்பதில் தீவிர பங்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் அவர்கள் எந்தக் குழுவிலும் சேர்ந்துகொள்ளாமல் சுயேச்சையான முயற்சியில் இறங்கினுல் தலைவர்களுக்கிடையில் அமைதி ஏற்படும் என்றும் திரு. வீரேந்திரா பட்டேல் பெங்களூரில் கூறினுர்.

காங்கிரஸ் முதல்வர்களுடன் தொடர்புகொண்டு காங்கிரஸ் தலைவர்களுக்கிடையிலான நெருக்கடியைத் தீர்த்துவைப்பதற்கு முயற்சிசெய்யும்படி ராஜஸ்தான் முதலமைச்சர் திரு. சுகாடியாவிடம் தாம் கேட்டுக் கொண்டிருப்பதாகவும் திரு. பட்டேல் கூறினுர். காங்கிரஸ் நெருக்கடியைத் தீர்ப்பதில் உதவும்படி திரு. ஜெகஜீவன்ராமையும் திரு. சவானையும் தாம் கேட்டுக் கொண்டதாகவும் அவர் கூறினுர். சமரச முயற்சிகள் இனிமேலும் பயனளிக்கும் என்று தாம் கருதவில்லை என்றும் எனினும் மற்ற முதல்வர்களுடன் தொடர்பு கொண்டு முயற்சி செய்து பார்க்கப் போவதாகவும் திரு. சுக்காடியா கருத்து வெளியிட்டிருக்கிறுர்.

பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி இம்மாதம் 22-ம் திகதி அழைத்திருக்கும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொள்ளப் போவதாகவும், தலைவர் திரு நிஜலிங்கப்பா அழைத்திருக்கும் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொள்வதில்லையென்றும் ஆந்திர முதல்வர் திரு பிரம்மானந்த ரெட்டி அறிவித்திருக்கிறுர்.

திரிபுரா காங்கிரஸ்கமிட்டி அங்கத்தவர்கள் பிரதம மந்திரி அழைத்திக்கும் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொள்வதென்று முடிவுசெய்திருக்கின்றனர்.

இன்று எழுந்துள்ள நெருக்கடியான நிலைபற்றியும் எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் புதுடில்லியில் கூடவிருக்கும் அகில இந்தியகாங்கிரஸ் கமிட்டி ஆராயும் என்று திரு சி சுப்பிரமணியம் கூறியிருக்கிறுர். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியைக் கூட்டவேண்டும்என்று 400-க்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் கோரியிருப்பதால் சட்டவிரோதம் என்று கூறுவது சரியாகாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## இந்திரா கோஷ்டியை தி. மு. க. ஆதரிக்கும்?

சென்னை, நவ. 10

பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டால் இந்திராகாந்திக்கு தி. மு.கழகம் ஆதரவு கொடுக்கும் என்று நம்பகமாகத் தெரிகிறது.

பாராளுமன்ற மழைகால கூட்டத்தொடர் இம்மாதம் 17-ந் திகதி கூடும். சுதந்திராகட்சி கொண்டுவரவிருக்கும்நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் 'வோட்' எடுப்பின்போது இந்திராகாந்திக்கு எதிராக 'வோட்' போட்டு அவரது மந்திரிசபையை கவிழ்க்க காங்கிரஸில் உள்ள 'சிண்டிகேட்' கோஷ்டி எம். பி.க்கள் திட்டமிட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

இதனுல் பாராளுமன்றத்தின் வருகிற கூட்டத்தொடர் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கூட்டமாகக் கருதப்படுகிறது.

இந்திராமீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் அல்லது கண்டனத் தீர்மானம் கொண்டுவரப்பட்டால் அந்தத் தீர்மானத்தை தோற்கடித்து இந்திராவின் மந்திரிசபையைக் காக்க வலது, இடதுசாரிக்கட்சிகள் முடிவுசெய்துவிட்டன.

இதேபோல 25 எம் பிக்களைக் கொண்ட திராவிட முன்னேற்றக்கழகமும் பிரதமரை ஆதரிக்க முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது. 'நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தால் தி. மு. கழகத்தின் 25 எம் பிக்களும் இந்திரா காந்தியை ஆதரிப்பார்கள்' என்று சிவகங்கை தொகுதி பாராளுமன்ற தி. மு. க. உறுப்பினர் டி. கிருஷ்ணன் மதுரையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இந்திரா மந்திரிசபைமீது சுதந்திராக்கட்சி கொண்டுவரவிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிப்பதா கூடாதா என்பதில் பாரதிய கிராந்திதளம் கட்சி எம் பிக்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் நிலவி வருகின்றன. சுதந்திராவின் தீர்மானத்தை நாங்கள் ஆதரிப்போம் என கிராந்திதளம் கட்சியின் பாராளுமன்ற துணைத்தலைவர் ரகுவீர்சிங் சாஸ்திரி அறிவித்தார். அதேசமயம் கிராந்திதளம் கட்சியின் தலைவர் திரு. சரண்சிங் சுதந்திரா தீர்மானத்தை ஆதரிக்கக்கூடாது என்று கூறியுள்ளார். ஆனுல் கிராந்திதளத்தின் 11 எம் பிக்களில் பெரும்பாலோர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிப்பவர்கள் என்று தெரிகிறது. இதனுல் உத்தரதேசத்தில் கிராந்திதளம் கட்சி இரண்டாக உடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

திருமதி இந்திராமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரும்போது 'சம்யுக்த சோஷலிஸ்ட்' இந்திராவுக்கு எதிராக அந்தத் தீர்மானத்தை ஆதரிக்கும் எனத் தெரியவருகிறது.

## கம்யூனிஸ்ட் படைகள் 300பேர்கொல்லப்பட்டனரா

சைகோன்நவ 10

தென்வியட்னுமிலிருந்து விலகி[illegible] ருக்கும் [illegible] ளுக்கு பதிலாக தென்வியட்னும்படைகள் சிறப்பாகப் [illegible] ரிக்கின்றது. இந்தக்கருத்தை அண்மையில் பீக்கிங்கில் இடம்பெற்ற கம்போடிய சுதந்திரதினக் கூட்டத்தில் சீன துணைப்பிரதமர் வெளியிட்டார்.

# மத்தியதரைக்கடலில் யு. எஸ். சோவியத்படைகள் டிட்டோ வெளியிட்டுள்ள கருத்து

## மார்க்கோஸைக் கொலை செய்ய முயற்சி?

மணிலா, நவ. 10

பிலிப்பைன்ஸில் நடைபெறவிருக்கும் ஜனதிபதி தேர்தலின் காரணமாக ஏற்பட்ட தகராறுகளில் இதுவரைக்கும் 50 பேர்வரையில் கொலையுண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனரல் மார்க்கோஸ் இந்த முறையும் ஜனதிபதி தேர்தலில் போட்டியிடுகிறுர். அவரைக் கொலைசெய்வதற்கு முயற்சி நடந்ததாகவும் அது தவிர்க்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது ஜெனரல் மார்க்கோஸ் இந்தச்சம்பவத்தைத் தொடர்ந்து தேர்தல் கூட்டங்களில் பேசுவதை ரத்துச்செய்துள்ளார்.

— —

## அப்பல்லோ 12 ஆயத்தங்கள்

நியுயோர்க், நவ.10

அப்பல்லோ-12 அடுத்த 14ம் திகதி சந்திரனை நோக்கிச் செலுத்தப்படுவதற்கான ஆயத்தங்கள் யாவும் சிறப்பாக இடம் பெற்று வருகின்றன.

அப்பல்லோ-12ல் சந்திரனுக்கு போகவிருக்கும் மூன்று விண்வெளி வீரர்களையும் நேற்று சோதனை செய்ய ஐந்து டாக்டர்கள் அவர்கள் பூரண உடல் நலத்துடன் இருப்பதாக அறிவித்துள்ளனர்.

— —

## மாணவர் மன்றம் அமைக்கப்பட்டது

மாவிட்டபுரம், திங்கள்

காங்கேசன்துறைக் கல்வி நிலைய மாணவர் மன்றம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. நிலைய அதிபர் திரு விஜயகுமார் தலைமை வகித்தார், நிர்வாகிகளாகப்பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் - லோறன் சரத், உபதலைவர் - செல்வி பூபதி, காரியதரிசி ஞா. குகநாதன் உபகாரியதரிசி தவராசா. ஐவர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

விசேட சொற்பொழிவுகளையும் அபிவிருத்தி வேலைகளையும் மேற்கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

## நாவலர் விழா ஏற்பாடுகள்: உபகுழு தெரிவு

யாழ்ப்பாணம், செவ்.

அடுத்தமாதம் முதலாந் திகதி யாழ்ப்பாணத்தில் நாவலர்விழாக் கொண்டாடுவதற்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை ஏற்பாடுகள் செய்து வருகின்றது. இவ் விழாசம்பந்தமான ஆலோசனைக்கூட்டமொன்றுயாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் பொதுச் செயலாளர் திரு.ம.ஸ்ரீகாந்தா தலைமையில் நடைபெற்றது. நல்லூரில் உருவாகிவரும் நாவலர் நிலைய மண்டபத்தில் டிசம்பர் முதலாந் திகதி காலையில் நாவலர் குருபூசையும், தொடர்ந்து சடையம்மா மண்டபத்தில் மகேசுரபூசையையும் நடாத்துவதென்றும், பிற்பகல் நாவலர் சைவப்பிரகாசவித்தியாசாலையிலிருந்து நாவலர் படம் ஊர்வலமாகஎடுத்துச் செல்லப்பட்டு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப்பிரார்த்தனை மண்டபத்தில் அல்லது சைவபரிபாலனசபை நாவலர் மண்டபத்தில் நாவலர் விழாவினை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டன.

குருபூசை- விழா ஏற்பாடுகளுக்கென ஓர் உபசெயற்குழுவும் நியமிக்கப்பட்டது. கூட்டத்திற்கு வந்திருந்த சைவப்பிரமுகர்கள் யாவரையும் உள்ளடக்கிய இச் செயற்குழுவின் கூட்டுச் செயலாளர்களாக திரு. க. சொக்கலிங்கம். திரு. அ. பஞ்சாட்சரமும் தெரியப்பட்டனர். இவர்களுக்கு உதவியாளராக திரு. ஆ சிவநேசச்செல்வன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நாவலர் விழாவில் கருத்தரங்கம், பண்ணிசை, நாவலர் பாடல்கள், சிறப்புச் சொற்பொழிவுகள்முதலான பல அம்சங்களும் இடம் பெறும்.

— —

## பிரதமருக்கு மகஜர்

மாவிட்டபுரம், திங்கள்

'காங்கேசன்துறையில் புதிய தபால் நிலையமொன்றை நிறுவவேண்டுமென்று பல பொதுஸ்தாபனங்களும், பட்டின சபையும் கோரியதன் பயனுக காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்துக்கு முன்பு இதற்கெனக் காணி வாங்கியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே இம் மாதம் 16-ம் திகதி வட பகுதிக்கு விஜயம்செய்யும் போது தபால் நிலையத்திற்கான அடிக்கல்லையும் தாங்கள் நாட்டவேண்டும்' எனக் காங்கேசன்துறை மக்கள் சார்பில் காங்கேசன்துறைப் பட்டினசபையின் முன்னுள் உறுப்பினர் திரு. தெட்சணமூர்த்தி பிரதமருக்கு அனுப்பியுள்ள மகஜரொன்றில் கேட்டுள்ளார்.

## குடியேற்ற பகுதியில் வங்கிகள்

அம்பாறை, திங்கள்

கல்லோயாப் பகுதியிலுள்ள குடியேற்ற வாசிகளின் நலனை உத்தேசித்து 3 வங்கிகளை அங்குள்ள கிராமப் பகுதிகளில் நிறுவவேண்டும் என்ற தீர்மானத்தை மக்கள் வங்கி அங்கீகரித்துள்ளது.

இந்த வங்கிகள் குடியேற்ற வாசிகளின் கிராமங்களில் நிறுவப்படவுள்ளன. இவற்றிற்கான கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகத் தெரிகிறது.

— —

## ஒட்டுப்பலகை ஊழியர் வேலை நிறுத்தம்

ஜின்தோட்டை, திங்கள்

ஜின்தோட்டை ஒட்டுப் பலகை கூட்டுஸ்தாபன ஊழியர்களின் வேலை நிறுத்தம் ஒருவித உடன்படிக்கையுமேற்படாததால்தொடர்ந்து நடைபெறுகிறது.

நான்கு தொழிற்சங்கங்களைச் சேர்ந்த இத் தொழிற்சாலையின் 1000 ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இவ்வூழியர்களில் ஒருவருக்கு வழங்கப்பட்டமேற்படிப்புக்கான உபகாரச் சம்பளத்தை ரத்துச் செய்ததைத் தொடர்ந்தே புதன்கிழமை இந்த ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளதாகத் தெரிகிறது.

— —

## நெசவு நிலையங்களுக்கு நிதி உதவி

கோட்டை, திங்கள்

மக்கள் வங்கி கூட்டுறவு நெசவு நிலையங்களுக்கு மின்தறிகள் வாங்குவதற்கு நிதி உதவி வழங்கத் தீர்மானித்துள்ளது அடுத்த மாதம் சீனுவிலிருந்து 200 மின்தறிகளை வாங்குவதற்கு இந்நிதியுதவி வழங்கப்படவுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவு செய்யப்பட்டது.

காங்கேசன்துறை மக்கள் சார்பில் காங்கேசன்துறைப் பட்டினசபையின் முன்னாள் உறுப்பினர் திரு. தெட்சணா மூர்த்தி பிரதமருக்கு அனுப்பியுள்ள மகஜரொன்றில் கேட்டுள்ளார்.

உதவி வழங்கத் தீர்மானித்துள்ளது அடுத்த மாதம் சீனாவிலிருந்து 200 மின்தறிகளை வாங்குவதற்கு இந்நிதியுதவி வழங்கப்படவுள்ளது

# யு. எஸ். சோவியத்படைகள்
# டிட்டோ வெளியிட்டுள்ள கருத்து

அல்ஜீயர்ஸ், நவ. 10

மத்தியதரைக்கடல் பிரதேசத்தில் இருக்கும் அமெரிக்க, ரஷ்யக்கடற்படைகளை விலகிச் செல்லும்படி கோருவது சம்பந்தமாக நடைபெறும்பேச்சுகளில் யூகோஸ்லாவியாவும் சேர்ந்துகொள்ளும் என்று அதிபர் மார்ஷல் டிட்டோ நிருபர்களிடம் கூறினார் அல்ஜீரியாவுக்கு விஜயம்மேற்கொண்டிருந்த மார்ஷல் டிட்டோ பெல்கிரேட் திரும்பிவிட்டார். நாடு திரும்புவதற்கு முன் அவர் நிருபர்களிடம் பேசினார்.

மத்தியதரைக்கடல் பிரதேசம் அப்பகுதியிலுள்ள நாடுகளுக்கே உரியது அங்கு அமெரிக்கக கடற்படை பல காலமாக முகாமிட்டிருக்கின்றது. அரபு நாடுகளின் உதவிக்காக, சோவியத் கடற்படையும் அங்கு போயுள்ளன என்றார் அதிபர் டிட்டோ.

மேற்காசிய நெருக்கடி தீர்வதற்கு 1967ல் ஐ. நா. பாதுகாப்புச்சபை நிறைவேற்றிய தீர்மானம் அமுல் நடத்தப்படவேண்டும் என்றும் அவர் கூறினார்.

## அரபு தற்காப்புச்சபை

அரபு நாடுகளின் கூட்டுத் தற்காப்புச்சபை கெய்ரோவில் நடத்திய பேச்சுவார்த்தைகளில் இஸ்ரேலுக்கு எதிராக அரபு நாடுகளின் ஒருமித்த எதிர்ப்பைத் திரட்டுவதென்றும் அவசியமானால் கூட்டு இராணுவ அமைப்பு ஒன்றை உருவாக்குவதென்றும் முடிவுசெய்தது. சுமார் நான்கு மணி நேரம் நடைபெற்ற ஆலோசனைகளின் பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டது

பதினேழு அரபு நாடுகளின் பாதுகாப்பு வெளியுறவு அமைச்சர்களும், இராணுவத் தலைவர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இஸ்ரேல் விமானங்கள் நேற்று சூயஸ் கால்வாய்க்குக் குறுக்கே பறந்து ஐக்கிய அரபுக் குடியரசு நிலைகளைத் தாக்கிவிட்டுத் திரும்பியதாக டெல் அவிவ்வில் அறிவிக்கப்பட்டது

இஸ்ரேல் வசமுள்ள சைனாய் பிரதேசத்தில் ஏற்கனவே எகிப்தியப் படைகள் நடத்தியுள்ள தாக்குதல் ஒன்றுக்குப் பதிலாகவே இஸ்ரேல் விமானங்கள் இந்தப் புதிய தாக்குதலை நடத்தியதாகக் கூறப்பட்டது. அரபுக் குடியரசு நிலைகளைத் தாக்க முயற்ற இஸ்ரேல் விமானங்களை எகிப்தியப் படைகள் துரத்தியடித்ததாகக் கெய்ரோவில் அறிவிக்கப்பட்டது.

## 2 எதிரிகளும் குற்றவாளிகள்; தண்டனை ஒத்திவைப்பு

வல்வெட்டித்துறை, திங்கள்

'சிகரட் வாங்கிக்கொண்டு பஸ் நிலையத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கையில் முதலாம் எதிரி எனது கன்னத்தில் அடித்தார். அடியையும் வாங்கிக்கொண்டு தொடர்ந்து போய்க்கொண்டிருக்கையில் எதிரி திரும்பவும் என் சட்டைக் கொலரில் பிடித்து பின்பக்கமாக இழுத்துச்சென்றுகையாலும் காலாலும் தாக்கினார். நான் குளறினேன். அப்போது சனங்கள் வந்து பிடித்துவிட்டனர்' என தும்பளையைச் சேர்ந்த செல்வநாயகம் இராசதுரை என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு புலோலியைச் சேர்ந்த மு. யோகசம்பந்தன், பருத்தித்துறையைச் சேர்ந்த ந. சிவலிங்கராசா ஆகிய இருவரும் தும்பளையைச் சேர்ந்த செ. இராசதுரை, சி. சண்முகலிங்கம் ஆகியோருக்கு கடந்த ஆனி மாதம் 7-ந் திகதி அடித்து படுகாயப்படுத்தியதாகப் பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்டது.

இராசதுரை தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சம்பவ நாள் பிற்பகல் 5-30 மணியளவில் நானும் அண்ணர் சண்முகலிங்கமும் அவரது மனைவியுமாக பருத்தித்துறை பஸ் நிலையத்திற்கு வந்தோம். நான் அண்ணரையும், மனைவியையும் ருகலைக்கு அனுப்பி வைப்பதற்காக பஸ் நிலையத்திற்கு வந்தேன். அந்த நேரத்தில் சிகரட் வாங்குவதற்காகக் கடைக்குப் போனேன். அப்போது 1-ம் எதிரி கூப்பிட்டார் நான் பஸ்ஸுக்கு நேரம் போய்விடும் என்ற எண்ணத்தினால் நிற்காமல் போனேன். சிகரட் வாங்கிக் கொண்டுவரும்போது 1-ம். 2-ம் எதிரிகள் தாக்கினர். அண்ணர் வந்து அவர்களைத் தடுத்தார். அவருக்கும் அடித்தார்கள். பொலிஸுக்குப் புகார் செய்தோம்.

சி. சண்முகலிங்கம், கான்ஸ்டபிள் திரு. ஐயாத்துரை ஆகியோர் சாட்சியமளித்த பின் மாஜிஸ்டிரேட் எதிரிகளைக் குற்றவாளிகளாகக் கண்டு றிமாண்டில் வைக்க உத்தரவிட்டு தீர்ப்புக் கூறுவதை இம்மாதம் 14-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## இளம் பெண்ணின் பரிதாப மரணம்

முல்லைத்தீவு, திங்கள

படுக்கையில் அறணை கடித்ததால் இளம் பெண் ஒருவர் மாண்டார். இப்பரிதாப சம்பவம் முல்லைத்தீவில் நடைபெற்றது.

முல்லைத்தீவு உளுப்பிரிவு சின்னத்தம்பி நமசிவாயத்தின் மூத்த மகளான பரமநாயகி (வயது 22) வீட்டுக்குள் படுத்துநித்திரைசெய்த போது இவர் அறணையினால் தீண்டப்பட்டாராம். காலஞ்சென்ற பெண்ணின் சகோதரனும் பாம்பு கடித்துச் சொற்ப காலத்துக்கு முன்னர் மரணமானது குறிப்பிடத்தக்கது.

## திருத்த வேலை தடுக்கப்பட்டது

சுழிபுரம், திங்கள

சுழிபுரம் கிழக்கு வீரபத்திரர் அம்பாள் றோட்டு இரண்டாம்முறை திருத்த, வேலைக்கான கல் பரவும் வேலைகள் ஒப்பந்தக்காரரால் ஆரம்பிக்கப்பட்ட போது அவ்வட்டாரக்கிராம சபை அங்கத்தவரும் சுழிபுரம் சமூக பொருளாதார இயக்கத்தினரும் கல்பரவும் வேலையை உடன் நிறுத்தும்படி கிராமசபைத் தலைவரை வேண்டிக்கொண்டனர்.

## 300 பேர் கொல்லப்பட்டனரா

சைகோன்நவ 10

தென்வியட்னாமிலிருந்து விலகிச் சென்று கொண்டிருக்கும் அமெரிக்கப்படைகளுக்கு பதிலாக தென்வியட்னாம்படைகள் சிறப்பாகப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டு வருவதாக அமெரிக்க தூதுவர் திரு பங்கர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

கடந்தவாரம் மாத்திரம் தென் வியட்னாம் படைகள் சுமார் 300 வடவியட்னாமியரையும் வியட்காங்கியரையும் கொன்றுள்ளதாக சைகோனில் அறிவிக்கப்பட்டது. மீக்கோன் பகுதியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றதாம்.

### சீனாவின் கண்டனம்

அண்மையில் அமெரிக்க அதிபர் திரு. நிக்சன் தென் வியட்னாமிலிருந்துபடைகளை விலக்கிக் கொள்வது சம்பந்தமாகவெளியிட்ட கருத்துக்களைக் கண்டிப்பதில் வடவியட்னாமுடன்செஞ்சீனாவும் சேர்ந்து கொண்டிருக்கிறது கடைசிவரை போராடுவது என்று வடவியட்னாம் செய்துள்ள முடிவை நவசீனா ஆதரிக்கின்றது. இந்தக்கருத்தை அண்மையில் பீக்கிங்கில் இடம்பெற்ற கம்போடிய சுதந்திரதினக் கூட்டத்தில் சீன துணைப்பிரதமர் வெளியிட்டார்.

## 4 இலங்கையருக்கு லண்டன் டிப்ளோமோ

லண்டன் நவ.10

இலங்கையைச் சேர்ந்த நான்கு மாணவர்களுக்கு லண்டனிலுள்ள விமான மோட்டார் பொறியியல் கல்லூரி அளிக்கும் டிப்ளோமா பட்டம் கிடைத்திருக்கிறது. திரு. கே. கருணாகரன், திரு. பி. இளமுருகன் திரு. ஆர்.எஸ். டெல்கொட திரு. எம். ஆர். எல்லவெல ஆகியோரே இம்மாணவராவர்.

திருவாளர்கள் கருணாகரன், இளமுருகன், டெல்கொட ஆகியோர் விவசாயப் பொறியியல் துறையிலும், திரு எல்லவெல மோட்டார் பொறியியல் துறையிலும் டிப்ளோமா பட்டங்கள் பெற்றிருக்கின்றனர்.

இக்கல்லூரியில் விமானப் பொறியியல், மோட்டார் பொறியியல், விவசாய பொறியியல் என்னும்மூன்று துறைகளில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. தற்சமயம் 50நாடுகளுக்குமேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 483 மாணவர் இங்கு பயில்கின்றனர்.

மேலதிகாரிகளுக்கு அனுப்பிய ஒரு முறைப்பாட்டில் இதில் மோசடி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## மறைவுக்கு அஞ்சலி

புதுடில்லி, நவ. 10

காலஞ்சென்ற மகராஷ்டிரா கவர்னர் டாக்டர் செரியனின் பூதவுடல் இன்று பம்பாயில் அடக்கம் செய்யப்பட்டது.

டாக்டர் செரியனின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக தமிழ்நாட்டிலுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இன்று மூடப்பட்டிருக்கின்றது. டாக்டர் செரியன் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக இருந்திருக்கிறார்.

டாக்டர் செரியனின் மறைவின் மூலம் நாடு ஒரு தன்னலமற்ற சிறந்த மனிதரை இழந்துவிட்டது என்று தமிழ்நாடு கவர்னர் சர்தார் உஜ்ஜல் சிங் ஒரு செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார். தமிழ்நாட்டில் டாக்டர் செரியன் ஆற்றியுள்ள பொதுஜன சேவைகள் பற்றியும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்

## அரசியல்வாதிகள் பற்றி தேரோ

சண்டலங்கவா திங்கள்

'மக்களின் நலனையிட்டு ஏதாவதொரு அபிவிருத்தி வேலை ஆரம்பிக்கப்படின் அரசியல் வாதிகள் தாங்கள் நன்மை பெறுவதற்காக அதற்குள் நுழைந்து விடுகிறார்கள், மற்றவர்களின் வேலைகள் மூலம் இவர்கள் அரசியல் அதிகாரத்தைப் பெற முயல்கிறார்கள். இதனால் பிரச்னைகள் ஏற்பட்டு அந்த அபிவிருத்தி வேலைசில வேளைகளில் நாசமடைகின்றது. எந்த சமூகசேவை இயக்கத்தை அரசியல் வாதிகள் ஆரம்பித்தாலும் அவர்கள் கடைசிவரை நிலையாக நிற்பதில்லை.

சண்டலங்கவாவில் சர்வோதய சங்கமொன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய நெடசகமுவா தர்மோதய பிரிவேனா அதிபர் வண ஞானந்த நாயக்க தேரோ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் பேசுகையில் சர்வோதயத்துக்கு அரசியல் நோக்கங்கள் ஒன்றுமில்லையெனவும் வேற்றுமையின்றி சமூகத்திற்கு தொண்டாற்றுதலே அதன் குறிக்கோள் எனவும் குறிப்பிட்டார்.


# இலவசம்

ஒவ்வோர்

# உஷா

# தையல் மெசினுடனும்

பிரயாணப் பெட்டியோ மின்சார இஸ்திரிக்கைப் பெட்டியோ இனம். ரொக்கக் கொள்வனவுக்கும் தவணைக் கொள்வனவுக்கும் பேதமின்றி வழங்கப்படும்.





விரையுங்கள் !

- டி லூக்ஸ்
- பிறைமா
- பிரின்செஸ்
- ஸ்ட்ரீம்லைன்ட்

ஆகிய நான்கு தினுசுகளில் விரும்பிய மெசினைத் தேர்ந்தெடுங்கள்.

வெகுமதிகள் முடியும்வரை மட்டுமே இந்தச் சலுகை.




சிறந்ததை வாங்குங்கள் உஷா எல்லாவற்றிலும் சிறந்தது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

அதிக சேவையில் ஈடுபடக் கூடியதாய் இருப்பதாலும் அதன் மூலம் கடவுளைக் காணலாம் என்று நம்புவதாலுமே அரசியலில் நான் ஈடுபட்டேன்.

—மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஐப்பசி மாதம் 26-ந் திகதி (11 - 11 - 69)


## குற்றத் தடுப்பு

இலங்கையில் நாள் ஒன்றுக்கு இரண்டு கொலைகள் நடைபெறுவதாகப் பொலிசாரின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. சென்ற வருடத்தில் 734 கொலைகள் இங்கு நிகழ்ந்துள்ளன இவற்றில் சரியான சமயத்தில் சமாதானத்தை ஏற்படுத்தக் கூடியவர்கள் தலையிட்டிருந்தால் சுமார் 470 கொலைகள் தவிர்க்கப்பட்டிருக்கலாமென்று கருதப்படுகிறது.

கொலைக்குற்றங்கள் அதிகரிக்கக் காரணம் என்ன?

பொலிசார்மட்டும்கொலைக் குற்றங்களைத் தடுத்து விட முடியுமா? கொலைக் குற்றம் செய்பவர்களைக் கண்டு பிடித்து நீதிமன்றத்தில் நிறுத்தித் தண்டனை பெற்றுக் கொடுப்பதன் மூலம் மேலும் மேலும் இச் செயல்களில் எவரும் ஈடுபடாமலும் கொலைக்குற்றம் பரவாமலும் தடுக்க முடியும் இதே சமயம் கொலைக்குற்றங்கள் ஏற்படாமல் தவிர்க்கவும் பொலிசாரால் முடியும் என்பதற்குவட பகுதிப் பொலிசார் எடுத்துக் காட்டாக நடந்திருக்கின்றனர் தீபாவளிதினத்தில் வட பகுதியில் ஒரு கொலையாவது நடப்பதுண்டு அடிதடி சண்டைகளும் அதிகரிக்கும். கிராமப் பகுதிகளில்தான் இச் சம்பவங்கள் அதிகம். இம்முறை தீபாவளிப் பண்டிகையன்று யாழ்ப்பாணப் பகுதியில் எந்த ஒரு மோசமான சம்பவமும் நடைபெறவில்லை. 'ஈழநாடு' பத்திரிகை பொலிசாரின் ஒத்துழைப்புடன் யாழ்ப்பாண நகரில் தீபாவளித் தினத்தன்று பிற்பகல் மாட்டுவண்டில் சவாரிப் போட்டியும் மாலையில் கலை விழாவும் நடாத்தியது. யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள மக்கள் நகருக்குத் திரண்டு வந்து இந்த நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தனர். இதனால் கிராமப்புறங்களில் எந்தவிதமான மோசமான சம்பவமும் ஏற்படவில்லை.

இதுபோன்று பண்டிகைத் தினங்களிலும் சாதாரண நாட்களிலும் மாலையில் மக்கள் தங்கள் களைப்பை மறந்

இந்த விழாக்கள் மட்டுமல்லாது பொலிசாரையும் விட சமயசமூக ஸ்தாபனங்களுக்கும் சமய சமூகத் தலைவர்களுக்கும் கொலை மற்றும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு அதிக பொறுப்பும் கடமையும் உண்டு. எல்லாச் சமயங்களும் சாந்தியையும் சமாதானத்தையுமே போதிக்கின்றன இப்போது சமய போதனை குறைந்து விட்டது. சாதனையும் அப்படியே. சகல சமயத் தலைவர்களையும் கொண்ட 'சாந்தி சேனை' ஒன்றை அமைத்து நாடுமுழுவதிலும் கிராமம் கிராமமாகப் பிரசாரம் செய்து வந்தால் ஓரளவாவது பயன் கிடைக்காமல் போகாது. இதன்மூலம் குற்றச் செயல்களைத் தடுப்பதுமல்லாமல் இன மத ஒற்றுமையையும் ஏற்படுத்த முடியும்.

குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்குச் சில திரைப்படங்களும் சில பத்திரிகைகளும் முக்கிய காரணம் என்பதையும் மறந்துவிடக் கூடாது. தமிழ்ப்படங்களின் இறக்குமதியை தடைசெய்ய வேண்டுமென்றும் குரல் கொடுப்பவர்கள் குற்றச் செயல்களைத் தூண்டும் எந்த மொழித் திரைப்படங்களையும் இங்கு திரையிடக்கூடாது என்று குரல்கொடுத்தால் நாட்டுக்குப் பெரும் சேவை செய்தவர்களாவர். குற்றச் செயல்களை தூண்டக்கூடிய திரைப் படங்களையும் பத்திரிகைகளையும் தணிக்கை செய்வதற்கு அரசாங்கமும் சரியானஉறுதியான நடவடிக்கை எடுப்பதும் குற்றச் செயல்கள் பரவாமல் தடுப்பதற்கு மற்றொரு வழியாகும்.

## இலங்கையில் கனடா எம்பிக்கள்

கோட்டை, திங்கள்

கனடாவின் ஆட்சிமன்ற அங்கத்தவர்கள் பத்துப் பேரைக் கொண்ட குழுவொன்று இலங்கை வந்து சேர்ந்துள்ளது.

இலங்கையில் 5 நாட்கள்

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## சுப்பிரமணியம்பூங்கா சிலை அமைக்க ஏற்ற இடமல்ல

அண்மையில் 'ஈழநாடு' இதழில் வெளிவந்த செய்தி ஒன்றில், காலஞ்சென்ற திரு வன்னியசிங்கத்திற்குச் சிலை அமைப்பதற்குச் 'சுப்பிரமணியம் பூங்கா' வில் இடம் ஒதுக்கித் தருப்படி யாழ்ப்பாண மேயரைக்கேட்டிருப்பதாகக்குறிப்பிட்டிருப்பதுகண்டு வேதனை யடைந்தேன்.

காலஞ்சென்ற வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் எந்த ஒரு அரசியல் கட்சியையும் சேர்ந்தவரல்லர். அவர் இப்பூங்காவை அமைக்க உதவியது எந்த ஒரு அரசியல் காரணங்களுக்காகவோ அல்ல என்பதை நாம் மனத்தில் கொள்வது நல்லது. இப்பூங்காவில் எந்த ஒரு அரசியல் வாதிக்காவது சிலை அமைக்க இடம் ஒதுக்குவது பொருந்தாது. நியாயமாகாது அதில் இடம் கேட்பதும் முறையல்ல. இப்பூங்காவில் யாருககாவது சிலை அமைப்பதென்றால், அது காலஞ்சென்ற வைத்திய கலாநிதி சுப்பிரமணியத்திற்கு மாத்திரமே அமைத்தல்சால்புடையது. இதுவே நகருக்கும் பெருமையளிக்கும்.

மேலும் திரு வன்னியசிங்கத்தின் சிலைககு இப்பூங்காவில் இடம் ஒதுககினால், தமிழர் மத்தியிலுள்ள எல்லா அரசியல் கட்சிகளும் ஒவ்வொருவருககுச் சிலை அமைக்க இடம் கோருவார்கள் இந்நிலை ஏற்பட்டால், காலகதியில் இப்பூங்கா முழுவதும் சிலைகளால் நிரப்பப் பெற்று, ஒரு இடுகாடாகக் காட்சியளிக்கும் என்றே அஞ்சவேண்டியுள்ளது இன்னொரு செய்தியில் கண்டது போல் திரு. வன்னியசிங்கத்திற்குச் சிலை அமைக்க உகந்த இடம் அவர் சேவை செய்த கோப்பாய்த் தொகுதியேயாகும்.

சி க இராசையா
பரமேஸ்வரா ஒழுங்கை.
யாழ்ப்பாணம்

## நிரந்தர நியமனம் எப்போது கிடைக்கும்?

பாடசாலைகளில் வசதிக் கட்டணத்திலிருந்து சம்பளம் பெற்று நூலகப் பொறுப்பாளர், லிகிதர், ஆய்வுகூடஉதவியாளர், காவலாளி, தொழிலாளி இவ்வாறு பலதரப்பட்ட பிரிவுகளிலும் கடமை புரிந்து வரும் சகல ஊழியர்கள் சார்பிலும் தெரிவிப்பதாவது:

கல்வி இலாகாவின் முறையான அனுமதிக் கடிதத்தோடு, வசதிக் கட்டணத்திலிருந்து மிகக் குறைந்த வேதனம் பெற்று பல ஆண்டுகளாகக் கடமை புரிந்து வரும் ஊழியர்களாகிய நாம் எமது நிலையைத் தெளிவுபடுத்தி, எமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தி கல்வி அமைச்சருக்கும், கல்வி மா அதிகாரிக்கும் பலமுறை விண்ணப்பித்தோம். இறுதியாக இவ்வாரமும் கல்வி அமைச்சருக்கு எமது கோரிக்கையை அனுப்பியுள்ளோம். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சகல ஆட்சிமன்ற பிரதிநிதிகட்கும் எங்கள் சார்பான நியாயங்களை எடுத்துக் காட்டி விளக்கியுள்ளோம். பலன் எதுவுமே கிடைக்கவில்லை.

எமது அங்கத்துவ ஊழியர்களின் வேதனம், சேர்ந்த காலம் முதல் இன்றுவரை

களின் விபரங்களும் சேகரிக்கப்பட்டன.

இந்தப் புதிய கோட்டாவில் வசதிக் கட்டணத்தில் சேவை புரியும் எமக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டுமென கல்வி மாஅதிகாரியையும் கல்விப்பகுதியையும் கேட்டிருந்தோம். இந்த வேளையிலாவது உதவி புரியுமாறு சகல ஆட்சிமன்றப் பிரதிநிதிகளையும் கேட்டிருந்தோம் பலன் எதுவும் இல்லை.

சகல திணைக்களங்களிலுமுள்ள காலியிடங்களையும் நிரப்புமாறு அரசாங்கம் அறிவித்துள்ள இந்த நல்ல வேளையில் எங்கள் பிரச்னையை அக்கறையோடு எடுத்துக்கூறி ஆவன செய்ய ஒருவருமின்றித் தவிக்கிறோம். ஒக்டோபர் மாதம் முதல் புதிய சம்பளத்திட்டப்படி சம்பளம் பெற்று மகிழ்ச்சி கொண்டிருக்கும் அரசாங்க ஊழியர்களுடனும் நாமும் சேரத் தகுதி பெறுவிட்டாலும் எமது சேவையில் ஒரு ஸ்திரமான நிலை வேண்டுமெனத் கேட்பது நியாயமானதே என்பதை எவரும் புரிந்து கொள்கிறார்கள் இல்லை.

இந்தச் சந்தர்ப்பத்திலாவது அல்லவுறும் இந்த அநேக ஊழியர்களின் பிரச்னையைத் தீர்க்க உதவிபுரியுமாறு சகல ஆட்சிமன்ற

குடும்பத்திட்டக்கருத்தரங்கில்

## வடபகுதியில் 40 ஆயிரம் மக்கள் பயனடைந்தனர்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பத்துநாள் தொடர்ந்து நடைபெற்ற குடும்பத்திட்டக் கருத்தரங்குகளுக்கு பெரும் திரளான தீவுப்பகுதி மக்களும் சமூகத்தலைவர்களும் சமுகமளித்தனர். இம் மாதம் 5ந் திகதி யாழ். அரசாங்க செயலகத்தில் அரசாங்க அதிபர் திரு பிரான்ஸிஸ் பீட்டர்ஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியோடு பத்துநாள் கருத்தரங்கு முடிவடைந்தது.

அக்டோபர் 26ந் திகதி அன்று மேற்படி கருத்தரங்கை ஊர்காவற்றுறை வைத்திய அதிகாரி டாக்டர் ரி தேவேந்திரன் தொடக்கி வைத்தார் இக் கருத்தரங்கில் வைத்திய துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், ஊழியர்களும் பிரசன்னமாயிருந்தனர்.

சுருவில், நயினாதீவு, அனலைதீவு, புங்குடுதீவு, காரைநகர், வேலணை, சரவணை மண்டைதீவு ஆகிய இடங்களிலுள்ள கிராமாபிவிருத்திச் சங்கங்கள் ஜனசமுக நிலையங்களின் ஆதரவிலும் குடும்பத்திட்டக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

இலங்கைகுடும்பத்திட்டச் சங்கத்தின் தகவல் பிரிவு குடும்பத்திட்டம் சம்பந்தமான கருத்தரங்குகளையும் சொற்பொழிவுகளையும் திரைப்பட நிகழ்ச்சிகளையும் பொதுக் கூட்டங்களையும் நடத்தியது,

யாழ் மாவட்டத்தில் யாழ் தாதிமார் பயிற்சிக் கல்லூரி ஆயுள் வேதக் கல்லூரி, காங்கேசன் துறையில் உள்ள குடும்பத் திட்டப்பயிற்சி நிலையம் ஆகிய இடங்களிலும் சொற்பொழிவுகளையும் திரைப்பட நிகழ்ச்சிகளையும் குடும்பத்திட்டப் பிரிவு நடத்தியது காங்கேசன்துறை நிகழ்ச்சிகளுக்கு டெபுடி சுகாதார சேவைகள் மேற்பார்வையாளர் டாக்டர் எஸ் சற்குரு தலைமைதாங்கினார்

திருநெல்வேலி கிழக்கிலும் தெற்கிலும் ஆங்காங்கே உள்ள ஜனசமூக நிலையங்களின் ஆதரவில்நடைபெற்ற இரு நிகழ்ச்சிகளோடு, குடும்பத்திட்ட தகவல்பிரிவின் வடபிராந்திய சுற்றுலா நிகழ்ச்சிநிரல் பூர்த்தியடைந்தது

இந் நிகழ்ச்சிகளை சுமார் 40 ஆயிரம்வட பகுதி மக்கள் தீவிர ஆர்வத்தோடும் அக்கறையோடும் கண்டும் கேட்டும் பயனடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது

## தீபாவளியன்று சாவகச்சேரியில் அமைதி

மட்டுவில், திங்கள்

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, சாவகச்சேரிப் பொலிஸ் பகுதியில் பூரண அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுமுகமாக சாவகச்சேரி பொலிஸ் அதிபர் திரு கு. துரைசிங்கம், பலத்த பந்தோபஸ்து நடவடிக்கைகளை எடுத்திருந்தார்.

நாட்டின் முக்கிய சந்திப்புகள் சகலவற்றிற்கும் பொலிசார் நின்று காவல் புரிந்தனர். இதைத்தொடர்ந்து, இப்பகுதியில் எதுவித அசம்பாவிதங்களும் ஏற்படவில்லை என்றும், அமைதியாகவும், சந்தோஷமாகவும்பண்டிகை கொண்டாடியதாகவும் தெரியவருகிறது.

## விக்கிரகங்கள் திருவுலா

மட்டுவில், திங்கள்

ஆறுமுகசுவாமி, வள்ளி, தெய்வானை சகிதமான, தெய்வ விக்கிரகங்களின், அலங்கார் சுற்றுலாப் பவனி நாளை நடைபெற விருக்கிறது.

கோண்டாவில் மேற்கு திரு நா சோமசுந்தரஸ்தபதியினால் உருவாக்கப்பட்ட ஆறுமுக சுவாமி, வள்ளி தெய்வானை, சகிதமான தெய்வ விக்கிரகங்களை நாளை யாழ் வண்ணை வைத்தீஸ்வர தேவஸ்தானத்திலிருந்து, அலங்கார ஊர்வலமாகக் கொண்டு சென்று, மல்லாகம் சாரம்பை கதிரவேல் முருக மூர்த்தி ஆலயத்தில் எழுந்தருளி வைக்கப்பட இருக்கின்றன.

மேற்படி ஊர்வலம், நாளைககாலை 9 மணிககு யாழ் வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்திலிருந்து புறப்பட்டு, யாழ்ப்பாணம் பட்டினத்திற்கூடாக

## பச்சிலைப்பள்ளி செய்திகள்

### நெசவு நிலையம்

செம்பியன்பற்றுப் பகுதியைச் சேர்ந்த ஆளியவளைக் கிராமத்தில் அரசாங்க நன்கொடைப்பணத்தில் கி. மு. சங்க மேற்பார்வையின் கீழ் ஒரு புதிய நெசவு நிலையம் நிறுவப்பட்டு வருகிறது.




விவசாயத்தைப் பொறுத்த வரையில் யாழ்ப்பாணக் குடாநாட்டை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். ஒன்று வானத்தையே நம்பியிருக்கும் விவசாயம், மற்றது வானத்தை நம்பியிராமல் கிணற்று நீரால் பாசனம் செய்யும் விவசாயம். ஒன்று புன்செய், மற்றது நன்செய்.

வானத்தை நம்பியிருக்கும் பிரதேசங்களில் பெரும்பாலும் நெற் பயிர்செய்யப்படுகிறது. சிறு போகத்துக்கு எள், பயறு, சணல் முதலியனவும் உண்டாக்கப்படுகிறது. பாசனப் பூமியில் தோட்ட விவசாயம் நடக்கிறது இங்கே போகமறிந்து புகையிலை, காய்கறி, வெங்காயம், மிளகாய் முதலியன உற்பத்தி செய்யப்படுகிறது. தோட்டக்காணிகள் பெரும்பாலும் மேட்டு நிலங்களிலும், தண்ணீர் தேங்கி நில்லாத நிலப்பாங்குகளிலும் இருப்பதால் மாரி காலத்தில் எவ்வளவு மழை பெய்தாலும் வெள்ளம் நிற்பதில்லை வெள்ளம் தேங்கி நிற்பது தோட்டப் பயிர்களுக்கு நல்லதல்ல. ஆனால் நெற்பயிருக்குத் தண்ணீர் தேங்கி நிற்பது அவசியம்.

நெற்பயிர் செய்வோரிடையே மறுபடியும் நெஞ்சிடிபிறந்துவிட்டது. ஆவணி முதலாந் திகதி தொடக்கம் அடுக்காகப் பெய்துகொண்டு வந்த மழை, பெரு வெள்ளம் போடுவதற்கு முன்னே ஐப்பசி பதினன்குடன் 'டப்' பென்று நின்றுவிட்டது இன்றைக்குக் கிட்டத்தட்ட இரண்டு வாரங்களாகப் போகின்றன. மழையில்லாவிட்டாலும் பாவாயில்லையே வயல்களில் தேங்கி நின்ற சொற்ப வெள்ளத்தையும் இந்த இரண்டு வாரங்களில் எறித்த கொடிய வெய்யில் மளமளவென்று உறிஞ்சி எடுத்துக் கொண்டது. 'வெண்ணை திரண்டுவரும் போது தாழியுடைந்தது போல' மழை செய்த இந்த வஞ்சகத்தை நினைந்து கமக்காரர் மனம் பொருமுகின்றார்கள்

பச்சைப் பசேலன்று செழித்து வளர்ந்துவந்த பயிர்கள் வாட்டம் கொள்ள ஆரம்பித்துவிட்டன. பல இடங்களில் பயிர்கள் குடலை வைக்கும் தறுவாயில் இருக்கின்றன. நிறைமாதக் கர்ப்பிணிக்கு நல்ல போஷாக்கு கிடையாதது போலாகிவிட்டது. மழை இல்லாமல் பயிர்கள் கருகிவிடுமோ? தானே முளைத்த பயிர்கள் ஒருபுறமிருக்க நட்ட பயிர்

வாயில் மண்ணைக் கொட்டிவிடுமா?

இரண்டு வாரங்களுக்கு முன்பு மிகவும் உஜாராக நிமிர்ந்து நடந்த கமக்காரர்கள் இப்பொழுது மேற்படி கேள்விகளை நினைத்து நினைத்துப் பெருமூச்சு எறிகிறார்கள். நேற்று முன்தினம் அமாவாசையும் வந்துபோய் விட்டது ஸ்கந்த சஷ்டியும் ஆரம்பித்துவிட்டது.

ஆனால் மழையை மட்டும் காணோம்!

வானத்தை நம்பியிருப்பவர்களின் கதி இதுதான். நெற்பயிர்களுக்கு நீர் பாய்ச்சும் வழிவகைகளை இனிமேலாவது கண்டுபிடிக்கவேண்டும். யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் நெல் வயல்களுக்கு நடுவே ஆங்காங்கு கிணறுகள் இருக்கின்றன. அவை நிறைய அருமையான மழை நீர் தேங்கி நிற்கிறது அதை உபயோகிக்கும் வழி தெரியவில்லை. எத்தனையோ கிணறுகள் பாவிப்பில்லாமல் தூர்ந்தே போய்விட்டன.

நமது முன்னோர் இந்தக் கிணறுகளை ஏன் தோண்டி வைத்தார்கள் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஏதோ ஒரு உபயோகத்துக்குத்தானே அவை தோண்டப்பட்டுள்ளன. வருடம் முழுவதும் இந்தக் கிணறுகள் யாருக்கும் உபயோகமில்லாமல் கிடப்பது ஏன்?

மழை இல்லாமல் தரை காய்ந்துவிட்டதும் மறுபடியும் புல் பூண்டு முதலிய களைகள் மொய்க்க ஆரம்பித்துவிடுமோ என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது. ஓரளவுக்கு வளரத்தான் செய்யும். அப்படி நேருமாகில் வயல்களில் வைக்கோல் கூட தேறமாட்டாது. இனிமேல் களை பிடுங்குவதென்பது சற்றேசிரமமான காரியம்.

இம்முறை நாற்றுப் பயிர் நூறு பிடிக்கு 12 ரூபாயிலிருந்து 15 ரூபாயாகி 20க்கும் வந்தது. பிடுங்கு கூலி 15 ரூபாய், நடு கூலி 15 ரூபாய். எனவே நூறு பிடி வாங்கி நடுவதற்கு வண்டிக் கூலி முதலியவற்றுடன் 50 ரூபாய்க்கும் மேலாகிவிட்டது. இத்தனையும் செலவு செய்தபின்பு மழை பொய்த்துவிட்டால் எப்படி இருக்கும்?

அச்சத்துக்கிடமான நிலைமை என்றாலும் இன்னும் ஒன்றும் குடி மூழ்கிப் போய்விடாது. எப்படியாவது சூரன் போருக்கிடையில் மழைபெய்யும் பெய்தே ஆகவேண்டும் என்று

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வந்து இந்த நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தனர். இதனால் கிராமப்புறங்களில் எந்தவிதமான மோசமான சம்பவமும் ஏற்படவில்லை.

இதுபோன்று பண்டிகைத் தினங்களிலும் சாதாரண நாட்களிலும் மாலையில் மக்கள் தங்கள் களைப்பை மறந்திருக்க பணச் செலவில்லாமல் பொழுது போக்கக்கூடிய நிகழ்ச்சிகளை அடிக்கடி நாட்டின் பல பகுதிகளிலும் நடத்தினால் குற்றச் செயல்கள் பொதுவாகக் குறையும் என்ற நம்பிக்கையை 'ஈழநாடு தீபாவளி கலைவிழா' ஏற்படுத்தியிருக்கின்றது.

## கனடா எம்பிக்கள்

கோட்டை, திங்கள்

கனடாவின் ஆட்சிமன்ற அங்கத்தவர்கள் பத்துப் பேரைக் கொண்ட குழுவொன்று இலங்கை வந்து சேர்ந்துள்ளது.

இலங்கையில் 5 நாட்கள் வரை தங்கி நிற்கும் இத்தூதுக் குழுவினர் ஆட்சிமன்றசங்கத்தின் இலங்கைப் பிரிவின் விருந்தினராகத் தங்கிநிற்பர்

பொலநறுவை, சிகிரியா, தம்புளை, கண்டி ஆகிய சரித்திரப் புகழ்பெற்றபல இடங்களை இவர்கள் இங்கு நிற்கையில் சென்று பார்வையிடுவர்.

# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 26-ந் திகதி (11-11-69)

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

**மேஷம்**- குடும்பநலனில் அதிக ஆர்வம் பிறக்கும். பந்துக்களின் ஆதரவு பெருகும் நிதானமான பேச்சு மற்றவர்களின் ஒத்துழைப்பைத் தேடித்தரும். பொருள் விஷயத்திலும் முன்னேற்றம் உண்டு.

**ரிஷபம்**- அரசபயத்திற்கு இடமுண்டு. வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள வேண்டாம். மின்னியல் பொறியியல் பகுதிகளில் கடமையாற்றுபவர்கள் மிகவும் கவனம் செலுத்தவும்.

**மிதுனம்**- அன்புக் கரங்கள் அணைக்கும், அதிஷ்ட தேவதையின் பார்வையும் பதியலாம். தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவும் கிடைக்கும் குருவின் உபதேசம்வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும்.

**கடகம்**- பயன்தரும் பயணம் இன்று மேற்கொள்ளப்படலாம் பழைய நினைவுகள் தலைதூக்கும். வார்த்தையில் வசீகரமும் வாழ்க்கையில் சுவையான நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

**சிம்மம்**- அதிஷ்டகரமான தினம் எத் தொழிலைச் செய்தாலும் அதன்மூலம் தகுந்த வருமானம் கிடைக்கும். விஞ்ஞானத்துறையில் ஈடுபடுபவர்கள் புதிய கண்டுபிடிப்புக்களை உருவாக்குவார்கள்.

**கன்னி**- செய்தொழிலில் தடுமாற்றநிலை தென்படும். வேண்டிய ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம்: குடும்பத்தில் சிறுபிணி தோன்றும். மனத்திடம் விரும்பத்தக்கது.

**துலாம்**- சிந்தனையின் தாக்குதல்கள் உங்களை சிந்திக்க வைக்கும் குழந்தையொன்றின் உடல் நலம்பாதிக்கப்படலாம். வைத்தியச் செலவுக்கும் இடம் உண்டு. அவசர முடிவைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்**- மனை வாழ்வில் மகிழ்ச்சிகரமான திருப்பம் ஏற்படும் குழந்தைகளின் முன்னேற்றம் திருப்தியை அளிக்கும் வருமானத்திலும் உயர்ச்சி கிடைக்கும்.

**தனுசு** வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும் எதிலும் தாக்க மனப்பான்மை உருவாகும். சிநேகித வழியால் கவலைகள் தோன்றக்கூடும். விவசாயிகளாயின் ஏமாற்றத்துக்கு இடமுண்டு மனத்திடம் வேண்டும்.

**மகரம்**- கற்றதால் பயன் இன்று கைமேல் கிடைக்கும். தாய்வழி செய்தியும் வரலாம் அறிஞர்கள் ஆதரவு தருவர், தொழில் புரியும் இடத்தில் செல்வாக்கும் பெருகும் இன்று சுபதினம்,

**கும்பம்**- இன்று உடல்நலம் சிறிது பாதிககப்படலாம். வாய்வுப் பதார்த்தங்களை தவிர்த்துக் கொள்ளவும். கடமையாற்றும் இடத்தில் சதி வேலைகள் நடக்கக்கூடும். எதிலும் நிதானம் வேண்டும்.

**மீனம்**- வாகனம் செலுத்துவோர் அதிக கவனம் செலுத்தவேண்டும். தனிவழிப் பயணத்தை தவிர்க்கவும். புனைந்துரைகளால் மனது புண்படலாம் பேச்சை வளர்க்காது மௌனம் சாதிக்கவும்.

கட்கும் எங்கள் சார்பான நியாயங்களை எடுத்துக் காட்டி விளக்கியுள்ளோம். பலன் எதுவுமே கிடைக்கவில்லை.

எமது அங்கத்துவ ஊழியர்களின் வேதனம், சேர்ந்த காலம் முதல் இன்றுவரை மாறுபடாத ஒரு சொற்பமான பணமேயாகும்.

அரசாங்க, தனியார் ஊழியர்களுக்கு மூன்று முறைகளில் இடைக்கால அலவன்ஸ் ரூபாய் மதிப்புக் குறைப்புச் சகாயப்பணம், பொதுச் சம்பள உயர்வு என்று வழங்கப்பட்ட சம்பள உயர்வுகள் எமக்கு எதுவுமேயில்லை.

பல வருட காலம் கடமையாற்றிய காரணத்தால் வேறு தொழிலுக்கு விண்ணப்பிக்க எமது வயது அதிகமாகிவிட்டது.

67-ம் ஆண்டு இறுதியில் கல்வி இலாகாவின் சுற்றறிகை ஒன்றின் பேரில் சகலரும் வேலையிலிருந்து ஒருமுறை நிறுத்தப்பட்டு, எங்கள் கடுமையான எதிர்ப்பின் காரணமாகவும் கல்வி இலாகாவின் ஆலோசனைச் சபையினரின் ஆதரவு காரணமாகவும் நான்கு மாதங்களின்பின் நாம் மீண்டும் வேலைசெய்ய அனுமதிக்கப்பட்டோம்.

மீண்டும் வேலை செய்ய அனுமதித்த அந்த சுற்றறிக்கையின் இறுதிப் பந்தியின்படி அந்தத் தேதியின் பின் எவரும் வசதிக் கட்டணத்தில் புதிதாக நியமனம் செய்யப்பட முடியாதென்பதை தெளிவுபடுத்தியுள்ளது.

ஆகவே தற்போது சேவையிலுள்ள வசதிக்கட்டண ஊழியர்களின் தொகைஇனிமேல் அதிகரிக்க வாய்ப்பில்லை. குறிப்பிட்ட இந்தத் தொகையினருக்கு நிரந்தர நியமனம் வழங்கி தீர்வு கண்டுவிட்டால் இனிமேல் வசதிக்கட்டண ஊழியர் என்ற பேச்சுக்கே இடமிருக்காது.

யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறு பாடசாலைகளிலுள்ள காலி ஸ்தானங்களைக் கணக்கிட்ட பின் கல்வி இலாகா யாழ் கல்விப்பகுதிக்கு பல பிரிவு ஊழியர்களாகவும் 75 புதிய ஆசிரியரல்லாத ஊழியர்களைச் சேர்க்க அனுமதிக்கும் கோட்டா ஒன்றை வழங்கியது. அந்தக் கோட்டாவின்படி பாடசாலைகளில் தேவைப்படும் ஊழியர் பது நியாயமானதே என்பதை எவரும் புரிந்து கொள்கிறார்கள் இல்லை.

இந்தச் சந்தர்ப்பத்திலாவது அல்லலுறும் இந்த அநேக ஊழியர்களின் பிரச்னையைத் தீர்க்க உதவிபுரியுமாறு சகல ஆட்சிமன்ற உறுப்பினர்களையும் விநயமாகக் கேட்டுக் கொள்கிறோம். அத்துடன் பாடசாலை விவகாரங்களில் அக்கறை கொண்டுள்ள மற்றையோருக்கும் எங்கள்நிலையை நன்கு தெளிவுபடுத்தி இருக்கிறோம்.

கு. அப்பாத்துரை,
செயலாளர்
வசதிக் கட்டண ஊழியர் சங்கம்.

சிதம்பரக் கல்லூரி,
வல்வெட்டித்துறை.

0 0

## பல்கலைக்கழகம்

உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு. உயர்ந்தோர் என்பவர், கல்வியறிவிற் சிறந்தவர்கள். கல்வியறிவைப் பெறுவது கல்விக் கூடங்கள் மூலமாயும், பல்கலைக்கழகங்கள் மூலமாமாகும் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி யப்பான், இந்தியாமுதலான தேசங்களில் உள்ள மக்கள் எல்லாம் கல்வி அறிவிற் சிறந்தது, அத்தேசங்களில் உள்ள அநேகம் பல்கலைக் கழகங்களால் என்பதுமறைக்கொணு, மறுக்கொணு உண்மை. இலங்கையில் சனப் பெருக்கம் கூடிவருவதை உலகறியும். பிறக்கும் பிள்ளைகள் அறிவிற்சிறந்தவர்களாக வேண்டும். அதற்குப் பல்கலைக்கழகங்கள் வேண்டும். இலங்கைத்தீவு ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றது. ஒவ்வொருமாகாணத்திற்கும் ஒவ்வொரு பல்கலைக்கழகம் தேவை, மொத்தம் 9 பல்கலைக்கழகங்கள் தேவை. இப்போ மூன்று பல்கலைகழகங்கள் இருந்து அறிவை வளர்க்கின்றன. இன்னும் 6 பல்கலைக் கழகங்கள் ஏற்பட வேண்டும். இந்த ஆறில் இரண்டு தமிழ் பல்கலைக் கழகங்கள் காலம் தாழ்த்தாமல் ஏற்பட வேண்டும் இதற்கு றேயல் கொமிஷன் வேண்டும். சேர் ஐவர் ஜெனிங்ஸ் என்னும் சிறந்த மேதையின் சிபாரிஸ் இலங்கையிலிருந்து கொண்டே இருக்கு இதை கல்வி மந்திரி அறியார் போலும் மந்திரிப்பதவியை ஏற்றவர், நடுநிலைமையை தனது செயல்களில் காட்ட வேண்டும்.

நா. சேனாதிராசா
சுழிபுரம்

இப்பத்திரிகை ஈழநாடுலிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## நெசவு நிலையம்

செம்பியன்பற்றுப் பகுதியைச் சேர்ந்த ஆளியவளைக் கிராமத்தில் அரசங்க நன்கொடைப்பணத்தில் கி. மு. சங்க மேற்பார்வையின் கீழ் ஒரு புதிய நெசவு நிலையம் நிறுவப்பட்டு வருகிறது.

## ஆசிரியர் இல்லை

முள்ளியான்பகுதியிலுள்ள நெசவு நிலையம் ஒன்றில நெசவு பயிற்சி அளித்து வந்த ஆசிரியர் அரசாங்க மொழிக்கொள்கை காரணமாகத் தற்காலிகமாய்வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பதன் காரணமாக நெசவு நிலையம் மூடப்பட்டிருக்கிறது.

## புதிய தபாலதிபர்

நாகர்கோவில் உப தபாற்கந்தோர் புதிய தபாலதிபராக தில்லைநாதர் சந்திரசேகரம் நியமனம் பெற்றுள்ளார்.

## வீடு எரிந்து சாம்பலாகியது

கட்டைக்காட்டைச் சேர்ந்த சுவாம்பிள்ளை பெண் ஆரோக்கியம் என்பவருக்குச் சொந்தமான வீடு கடந்த வெள்ளிக்கிழமை இரவு எரிந்து சாம்பலாகியது. பெறுமதியானபொருட்களும், நகைகளும், ரொக்கமும் வீட்டினுன் இருந்ததாகக் கூறப்படுகிறது.

## திருடர் கோஷ்டிகள் அகப்பட்டனர்

பளை, இயக்கச்சி ஆகிய பகுதிகளில் நடைபெற்ற திருட்டு சம்பந்தமாக இரண்டு திருடர் கோஷ்டியைச் சேர்ந்தவர்களில் சிலர் பளைப் பொலிஸார் கையில் சிக்கியுள்ளனர். இதேகோஷ்டிகளைச் சேர்ந்த தலைமறைவாயுள்ள சில நபர்களைப் பிடிப்பதில் 'பளைப் பொலிஸார் தீவிரமாய் ஈடுபட்டுள்ளனர்.

## கோவிலில் திருட்டு

கட்டைக்காடு அர்ச் கப்பலேந்தி மாதா கோவிலில் ரூபாஆயிரம் பெறுமதியான பூசைப் பாத்திரங்கள் மற்றும் கோவிலில் சுருவங்களுக்குப்போடும் முடி சங்கிலி ஆகிய பெறுமதியுள்ள பொருட்கள் கடந்த புதன் கிழமை இரவு திருடப்பட்டுள்ளன. சில மாதங்களின் முன்னரும் இதே கோவிலில் கள்வர் கோஷ்டி தங்கள் கைவரிசையைக் காட்டியுள்ளது. செம்பியன்பற்று, தாளையடி, வெற்றிலைக்கேணி ஆகியஇப்பகுதிகிறிஸ்தவ கோயில்களிலும் பல திருள் வைக்கப்பட்டிருக்கின்றன.

மேற்படி ஊர்வலம், நாளைககாலை 9 மணிககு யாழ் வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்திலிருந்து புறப்பட்டு, யாழ்ப்பாணம் பட்டினத்திற்கூடாக இரவு ஏழாலைக கிராமத்தை வலம் வந்துபின் நாளை மறுதினம் காலை புறப்பட்டு, மயிலங்காடு, சூராவத்தை, மயிலணி போன்ய மேலும் பல கிராமங்களில் சுற்றுலா நடத்தி இரவு 7 மணியளவில் மேற்படி ஆலயத்தை வந்தடையும் என்றும் அறிவிககப்பட்டுளளது.

தடவைகள் திருட்டுகள் நடைபெற்றுள்ளன.

## முள்ளியான் வட்டாரம்

முள்ளிப்பற்றுக் கிராம சபைக் குட்பட்ட முள்ளியான் வட்டாரத்தை ரெண்டாகப் பிரிப்பதற்கான ஆரம்ப வேலைகளை முள்ளிப்பற்றுக் கிராமசபை செய்து வருகிறது.

## கடும்மழை

இப்பகுதியில்பருவமழையை நம்பி வேளாண்மைசெய்யும் அநேக கமக்காரர்கள் கடும் மழைபெய்து வயல்களில் அளவுக்கதிகமான நீர்தேங்கி நிற்பதால் நெல் விதைக்க முடியாது கஷ்டமான நிலையிலுள்ளனர்.

## நேர்முகப்பரீட்சை

செம்பியன்பற்றுப் பகுதியிலுள்ள ஆளியவளைக் கிராமத்தில் ஒரு புதிய உபதபால் நிலையம் நிறுவப்படவிருக்கிறது அதற்கான உபதபாலதிபர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 19-ம் திகதி யாழ்ப்பாணம் தபாற்கந்தோரில் நடைபெறவிருப்பதாகத் தெரிகிறது.

## ஆசிரியர் மீது புகார்

வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்க பாடசாலையில் கடமையாற்றும் மாணவ ஆசிரியர் ஒருவர் மாணவர்களை அவதூறுகப் பேசியதாகவும் தவறுன பாடங்களை பாடசாலை மாணவர்களுக்குப் போதித்ததாகவும் குற்றம் சாட்டி இவைபற்றி உடன் விசாரணை நடாத்தும்படி வெற்றிலைக்கேணி பெற்றூர் ஆசிரியர் சங்கம் கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினரையும் யாழ்ப்பாணக் கல்வி அதிகாரியையும் தந்தி மூலம் கேட்டுள்ளது. இம் மாணவ ஆசிரியர் திடீரென பாடசாலையிலிருந்து லீவு பெறுமல் சென்றுள்ளதாக மேற்படி பாடசாலைத் தலைமை ஆசிரியர் கல்வி அதிகாரிகளுக்குத் தந்தி மூலம் அறிவித்துள்ளார்.

வைக்கும் தறுவாயில் இருக்கின்றன. நிறைமாதக் கர்ப்பிணிக்கு நல்ல போஷாக்கு கிடையாதது போலாகிவிட்டது. மழை இல்லாமல் பயிர்கள் கருகிவிடுமோ? தானே முளைத்த பயிர்கள் ஒருபுறமிருக்க நட்ட பயிர்களின் கதியென்ன? சென்ற வருடத்தைப் போல இவ்வருடமும் பின் மழையில்லாமல் வேளாண்மை அழிய வேண்டியதுதானு? மழை மறுபடியும் கமக்காரர் இருக்கும்?

அச்சத்துக்கிடமான நிலைமை என்றுலும் இன்னும் ஒன்றும் குடி மூழ்கிப் போய்விடாது. எப்படியாவது சூரன் போருக்கிடையில் மழைபெய்யும் பெய்தே ஆகவேண்டும் என்று எல்லோரும் எதிர்பார்க்கின்ருர்கள். கார்த்திகை விளக்கீடுவரை மழை இருக்கிறதல்லவா?

—கலப்பை

யாழ். பொலிஸை ஏமாற்றிவந்த

# திருடன் சங்கானையில் கைது; சலவைத் தொழிலாளிசாதனை

சங்கானை, திங்கள்

நீண்ட காலமாக யாழ்ப்பாணப் பகுதியில் பல களவுகளைச் செய்து பொலிசாரை ஏமாற்றி வந்ததாகக் கூறப்படும் அக்கரைப்பற்று எட்டாம் குறிச்சியைச் சேர்ந்த பொன்னம்பலம் மகேஸ்வரன் (வயது 20) என்பவர் சங்கானையில் வைத்துப் பொலிசாரிடம் வகையாக மாட்டிக்கொண்டார்

அராலிமேற்கு கொட்டைக்காடு என்னுமிடத்தில் கந்தப்பா சுப்பிரமணியம் என்பவருடைய வீட்டில் அதிகாலை எவரும் இல்லாத வேளை உட்புகுந்து அலுமாரியை உடைத்து ரொக்கப் பணம் ரூபா 490 மற்றும் தங்கநகைகள், குடை ஆகியவற்றை எடுத்துக்கொண்டு வடுகையில் அருகிலுள்ள குளத்தில் சலவைத்தொழில் செய்துகொண்டுநின்ற சின்னையா என்பவர் சந்தேகத்தின்பேரில் இவரை மடக்கிப்பிடித்து சங்கானைப் பொலிசாரிடம் ஒப்படைத்தார்.

இதுபற்றி விசாரணை நடாத்திய பொலிஸ் சார்ஜண்ட் கே முத்துக்கிருஷ்ணன் களவாடப்பட்ட பொருட்களை மீட்டதுடன் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு குழந்தையின்கழுத்திலிருந்து திருட்டுப்போன தங்கச் சங்கிலி ஒன்றையும் இவரிடமிருந்துமீட்டுள்ளார் அண்மையில் புகையிரதத்தில் பிரயாணம் செய்துகொண்டிருந்த பெண்மணி ஒருவரிடம் களவாடப்பட்ட பொருட்களையும் மீட்பதில் பொலிசார் தீவிர முயற்சி எடுத்து வருகின்றனர் இந்நபர் முன்னர் பல குற்றங்கள்புரிந்து சிறைசென்றவர்.

## அடுத்த ..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ராஜ மேடையிலும் தீபாலங்காரத்தை ஏற்றிவைத்த போது பொதுமக்கள் முகங்களில்ஒரு புதுஒளி பரவியது.

கலை நிகழ்ச்சிகள், நகைச்சுவை நிகழ்ச்சிகள் மக்களை கவர்ந்த போதெல்லாம் பொலிஸார் அவர்களது ஆர்வத்தைக்கட்டுப்படுத்துவதில் பெரும் பாடுபட்டனர். விழாவில் அமைதியையும் ஒழுங்கையும் அவர்கள் மிக கண்ணியத்துடன் நிலைநாட்டினர்.

யானைமார்க் பீடிஸ்தாபனத்தாரின் உதவியுடனும் யாழ்ப்பாணம் பொலிஸாரின் ஒத்துழைப்புடனும் 'ஈழநாடு' நடத்திய விழா நல்ல ஒரு பெருவிழா என்பது பொதுமக்களின் தீர்ப்பு உங்களின் மனம் நிறைந்த ஒத்துழைப்புக்கு ஒவ்வொருவருக்கு ம்மனப்பூர்வமான நன்றி. விழா சிறப்புற நடைபெறுவதற்கு உள்ளும் புறமும் தெரிந்தும் தெரியாமலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் நமது நன்றி உரியது.

—கணேஷ்

## வானொலியில் கச்சேரி செய்வர்

உடுப்பிட்டி, திங்கள்

நெல்லியடியைச் சேர்ந்த நாதஸ்வரக்கலைஞர்கள் மூவர் இலங்கைவானொலியில் கச்சேரி நிகழ்த்த உள்ளனர். இவர்கள் மூவரும் ஒரே குடும்பத்தைச்சேர்ந்தவர்களாவர்.

திரு. கேசவன்பரமு, திரு. பரமுசத்தியமூர்த்தி, திரு. பரமுசதாசிவம் ஆகிய மூவருமே இலங்கை வானொலியில் நாதஸ்வரக்கச்சேரி செய்ய விருப்பவர்கள் இவர்கள் மூவரும் ஒரு குடும்பத்தைச்சேர்ந்த தந்தையும், புதல்வர்களுமாவர்.

எதிர்வரும் 24-ம்திகதி நெல்லியடிக் கலைஞர்களின் நாதஸ்வரக்கச்சேரியை இலங்கை வானொலியில் கேட்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org